ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

# சாயி மார்க்கம்

**SAI MARGAM (*Tamil*)**


| | | |
|---|---|---|
| மலர் 4<br>இதழ் 10 | ஒரே ஒரு மதம்<br>அது அன்பு எனும் மதம் | சாயி தர்ம ஆண்டு<br>அக்டோபர் — டிசம்பர் 1997 |


## பஜனை சிறப்பிதழ்

பொருளடக்கம்


| | |
|---|---|
| *பஜனை* | *01* |
| *வாயைத் திறந்து பாடுங்கள்* | *02* |
| *பஜனை — சில குறிப்புகள்* | *03* |
| *சாயி பஜனை* | *05* |
| *பாரம்பரியத்தைப் பேணுங்கள்* | *07* |
| *சாயி பஜனை அனுபவங்கள்* | *09* |
| *அர்த்தம் புரிந்து பாடுங்கள்* | *11* |
| *இலக்கைத் தெரிந்துகொள்ளுங்கள்* | *13* |
| *தலைமை ஆசிரியருக்கு ஒரு தந்தையின் கடிதம்* | *16* |
| *தெய்வீக லட்டு* | *17* |
| *நல்ல மாற்றம்* | *19* |
| *பேராசிரியர் N. கஸ்தூரி* | *20* |
| *இணைப்புச் செய்திகள்* | *25* |



*தனிப்பிரதி:-* *ரூபா 25/-*

*வருட சந்தா (4 பிரதிகள்) இலங்கை* *ரூபா 80 -*

*வெளிநாடு* *US $ 7*

*காசோலை, பணக் கட்டளைகள் அனுப்பவேண்டியது:*

Co-ordinating Committee
Sri Sathya Sai Organisation
Northern Zone.

*தொடர்பு: ஆசிரியர், சாயி மார்க்கம்*

*ஆசிரியர்:*
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
(நந்தி)

*துணை ஆசிரியர்கள்:*
*ஸ்ரீ S. R. சரவணபவன்*
*ஸ்ரீ வி. கே. சபாரத்தினம்*

*நிருவாக அலுவலகம்: 681/2, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பஜனை

ஒரு சாயி நிலையத்தின் அடித்தளமாக விளங்குவது பஜனை. பகவான் பாபா எமக்குத் தந்துள்ள இலகுவான, சுவையான, எல்லோரும் ஈடுபடக்கூடிய ஒரு சாதனை பஜனை. இறைவனின் நாமத்தை இசையுடன் அனுபவித்து, மனத்தை ஒரு முகப்படுத்துவதற்கு ஒரு அருமையான சாதனை.

இந்த சாதனையின் தரம் குறைந்து விட்டது என எமது மத்திய இணைப்பாளர் மதிப்புக்குரிய சிவஞானம் ஐயா அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். ஆகவேதான் இந்த இதழை ''பஜனை சிறப்பிதழாக'' வெளியிட முடிவுசெய்துள்ளோம். மத்திய இணைப்பாளர் அவர்களுடைய அபிப்பிராயத்தை எல்லா நிலையங்களின் தலைவர்களும், குறிப்பாக பஜனைப் பொறுப்பாளர்களும் கவனத்தில் எடுத்து தங்கள் தங்கள் நிலையங்களின் பஜனைத் தரத்தை உயர்த்தவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

பஜனையின் தரத்தை உயர்த்துவதற்கு உதவியாக இங்கு மூன்று கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஒன்று மத்திய இணைப்பாளர் அவர்களின் ஆலோசனைகள், அடுத்தது பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானம் அவர்களுடையது. மூன்றாவது யாழ்ப்பாணத்தில் சாயி நிலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட கடினமான காலம் முதல் பஜனையில் ஈடுபட்டுள்ள ஒரு சாயி பக்தையின் அனுபவக் கட்டுரை.

இக் கட்டுரைகளுக்கூடாக உங்கள் பஜனை நிலையத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளுக்கு விடை கிடைக்கும். அவற்றை நடைமுறைப்படுத்தி, உங்கள் நிலையங்களுக்கு வரும் சாயி பக்தர்களுக்கு ஒரு நிறைவான பஜனையை வழங்கி அவர்கள் 'நல்ல ஒரு சாதனையில் ஈடுபட்டோம்' என்ற மனநிறைவோடு இல்லங்களுக்குத் திரும்பச் செய்யவேண்டியது பஜனைப் பொறுப்பாளரின் சிரமமான பணி.

பொதுவாக, அனேக நிலையங்களில் முக்கியத்தர்களுக்குப் பஜனை பாடச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்ற சங்கடமான நிலை பஜனைப் பொறுப்பாளர்களுக்கு ஏற்படுவதுண்டு. அவர்கள் பஜனைப் பயிற்சிக்கு வரமாட்டார்கள். ஆனால் பஜனை பாடுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அந்தப் பாட்டில் ராகம், தாளம், 'பா'வம் எதுவும் சரியாக அமையாது. அகம்பாவம் மட்டும் நிமிர்ந்து நிற்கும். இந்தநிலையில் ஒரு நல்ல பஜனையை அமைப்பது பஜனைப் பொறுப்பாளருக்கு இயலாத காரியம்.

பாடகர் ஒவ்வொருவரும் தாங்கள் பாடும் பஜனைப் பாட்டினால் நிலையத்திற்கு வந்திருக்கும் பக்தர்களை ஓர் உன்னத மனோலயத்திற்குக் கொண்டுசெல்ல முடியுமா?, என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சந்தேகம் உடையவர்கள் பயிற்சிசெய்து பாடவேண்டும். முடியாதோர் தங்கள் பிரார்த்தனை அறையில் தினசரி பாடி தம் விருப்பத்தைப் பூர்த்தி செய்யலாம்.

எல்லோரும் எல்லாப் பாடல்களையும் சிறப்பாகப் பாடமுடியாது தங்கள் குரல் வளத்திற்கு ஏற்ப சில பாடல்களைத் தெரிவு செய்து அவற்றைப் பயிற்சி செய்து அவற்றையே திரும்பத் திரும்பப் பாடுவதற்கு வெட்கப்படத் தேவையில்லை.

திரு. வே. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டதுபோல சுவாமிகூட சில பாடல்களையே திரும்பத்திரும்பப் பாடுகிறார்.

புதிய பாடல்களைக் கேட்டுவிட்டுப் போதிய பயிற்சியில்லாமல் அவற்றை பஜனையில் பாட முற்பட்டு எல்லோருடைய மனநிலையையும் குழப்பத்தில் ஆழ்த்தி பஜனையையே ஒரு குளறுபடியாக்குவது பல இடங்களில் நடைபெறுகிறது. ஆகவே பஜனைப் பயிற்சி மிக அவசியமான ஒன்றாகக் கணிக்கப்படுகிறது. தங்கள் நிலையங்களில் பயிற்சியளிக்கக் கூடிய தகுதியானோர் இல்லையெனக் கருதினால் அயலிலுள்ள பஜனை நிலையத்தில் உதவி கேட்கலாம்.

எப்படியாவது இருக்கின்ற வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தி நிலையங்களில் நல்ல பஜனையை வழங்கவேண்டிய பொறுப்பு பஜனைப் பொறுப்பாளரினதும், தலைவர், மற்றும் நிலைய நிர்வாகிகளைச் சேர்ந்ததாகும்.

ஜெய் சாயிராம்.

**ஆசிரியர்**

## வாயைத் திறந்து பாடுங்கள்

சங்கீர்த்தனம் மிகவும் புனிதமானது. ''ராகம்'' என்றால் விருப்பம் என்ற பொருளும் உண்டு. பிரேமையுடனும் முழு நாட்டத்துடனும் விருப்பத்துடனும் நாமஸ்மரணை செய்யவேண்டும். நாமஸ்மரணை கலியுகத்தில் தெய்வத்தை உணர முக்கிய சாதனமாகும். கிருதயுகத்தில் தியானமும் திரோதாயுகத்தில் யக்ஞமும், துவாபர யுகத்தில் அர்ச்சனையெனும் வழிபாடும் கலியுகத்தில் நாமஸ்மரணையும் தெய்வத்தையடையவும், முக்திபெறவும் உரிய சாதனங்களாகும். இந்த நாமஸ்மரணை கானத்துடன் செய்தால் இதயத்தை உருகவைத்து நம்பால் இறைவனின் அருளைப் பொழியவைக்கும்.

பண்டிதர்கள் ஸ்லோகங்கள் மூலம் தெய்வத்தைப்பற்றிக் கூறுகின்றனர். இவர்களுக்கு வாயினால் ஸ்லோகங்களை உச்சரிப்பது மட்டுமே முக்கியம். பக்தி'பா'வம் இதில் இராது. மற்றும் பலர் நாடகத்தின் மூலம் தெய்வத்தின் பெருமையைச் சித்தரித்தாலும் அவர்கள் வார்த்தைகளை மட்டுமே மனப்பாடம்செய்து பேசுவார்களேயன்றி உள்ளத்தில் ஆழ்ந்த பக்தியிராது. இதுவும் தெய்வத்தை ஈர்க்காது. ஆனால் கானத்தின்மூலம் பிரார்த்தனை செய்தால் அது எளிதாக எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கும். ஆஸ்திகர்களோ, நாஸ்திகர்களோ, எவராயினும் இசைக்கு உருகுவார்கள். உதாரணமாக ''ராமா என்னைக் காப்பாற்று'' என்று சாதாரண பேச்சின்மூலம் கோரலாம். ஆனால் அது இதயத்தைக் கனியவைக்காது. அதையே ஸ்லோகமாகவும், பத்யமாகவும் கூறலாம். அதுவும் கனிவைப் பெறமுடியாது. அதையே உருக்கமான ராகத்தில் ''ராமா என்னைக் காப்பாற்று'' என்று இசையுடன் கோரினால் எப்படிப்பட்ட கல்நெஞ்சையும் உருகவைக்கும்.

**— பாபா —**

**ச. சாரதி (தமிழ்) மார்ச் 92**

ௐ

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பஜனை - சில குறிப்புகள்

செ. சிவஞானம் அவர்கள்
(இலங்கையின் மத்திய இணைப்பாளர்)

1. பஜனை ஒரு நிகழ்ச்சி, ஒரு காரியத் திட்டம் (A Programme). அதற்கு ஒரு இயக்குநர் (Director) தேவை. எல்லாக் காரியங்களும் நிகழ்ச்சிக்கு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும். "நீ பாடு" "மற்றவர் பாடு" என்ற சம்பாஷணைக்கு பஜனை தொடங்கியபின்பு இடமில்லை. என்ன பாட்டு, என்ன ஒழுங்கில், யாரால், என்ன பக்க வாத்தியம் என்பவை எல்லாம் இயக்குநரால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒருவர் சொல்லி மற்றவர் செய்கிறார் என்ற காட்சி சபையில் தெரியப்படாது. எல்லாம் தானாகவே உரிய நேரத்தில் நடைபெறும் காட்சியைத்தான் சபையில் உள்ளவர்கள் காணவேண்டும்.

2. பஜனை தொடங்கியபின் மேடையில் ஒருவரும் ஏறப்படாது. மேடையிலிருக்கும் பகவானின் ரூபத்திற்கும், பக்தர்களுக்குமிடையில் ஒரு தடையும் (Obstruction) இருக்கக்கூடாது.

3. பஜனை ஒரு குழு முயற்சி. சங்கீத வித்துவத்தில் போட்டி அல்ல. மண்டபத்தில் இருக்கும் எல்லோரையும் ஒரு ஆனந்த நிலைக்குக் கூட்டிச்செல்வது பாட்டுத் தலைவரின் (Bhajan Leader) கடமை. தலைவரும் நிறைந்த நெஞ்சோடு, அனுபவித்து, ரசித்துப் பாடவேண்டும். சுருதி, தாளம், மெட்டு, சாரீரம், பாவம் (Bhava) நன்றாக அமையவேண்டும்.

4. எவரும் பாட்டுத் தலைவராக உடனே வரமுடியாது. பயிற்சி வேண்டும். பயிற்சி மாத்திரம் போதாது. இயற்கையான சாரீரமும் வேண்டும். சாரீரம் இல்லாதவர்கள் இசையை ரசிப்பதற்கு இறைவன் காதுகளைத் தந்தானே என்ற சிந்தனையில் திருப்தி கொள்ளலாம்.

5. சேர்ந்து பாடுவோர் (Chorus) பாடகர்கள் இருக்கும் முன்வரிசைக்குக் கிட்ட இருத்தல் பஜனையின் தரத்தை உயர்த்துவதற்கு உதவியாக இருக்கும்.

6. தாளத்திற்கு ஏற்றவாறு கைதட்டிப் பாடுதல் பஜனையில் இருப்பவர்களின் ஒரு முனைப்பாட்டிற்கு (Concentration) உதவியாக இருக்கும். கண்களை மூடிக்கொண்டு பஜனை பாடுதல் ஒருமுனைப்பாட்டை ஊக்குவிக்கும். ஒருமுனைப்பாடு குறையும் நேரங்களில் கண்விழித்து மேடையில் இருக்கும் ரூபத்தைப் பார்க்கலாம். ஒருவரில் ஒருவர் முட்டாமல் இருப்பது நல்லது. தியானப் பயிற்சியில் இருப்பது போன்று பஜனையும் ஒரு தியானப் பயிற்சியே. கூனி வளைந்து இருக்காமல் நிமிர்ந்து இருந்து பாடுதல் பயன் தரும்.

7. பாடப்படும் பாட்டின் பொருளை உணர்ந்து பாடுதல் அவசியம். பஜ

னைப் பாட்டுகளின் கருத்தை விளக்கும் நூல்கள் இருக்கின்றன. தங்கள் சொந்த பஜனைப் புத்தகங்களில் ஒவ்வொரு பாட்டிற்கும் அருகில் விளங்காத சொற்களின் கருத்தைப் பேனையால் எழுதி வைத்திருத்தல் உதவியாக இருக்கும். அனேகமான பாட்டுக்களிற்கு இது தேவைப்படாது. பாட்டுத் தலைவர்கள் சொற்களை வடிவாக அழுத்து உச்சரிக்கவேண்டும்.

8. பஜனை பாடும்பொழுது பகவானின் ரூபத்தை மேடையிலோ மனத்திலோ பார்த்துப் பாடவேண்டும். காண்பது ஒரேயொரு காட்சியாக அமைதல் உற்சாகத்தைத் தரும்.

9. பின்தொடர்ந்து பாடும் ஒருவர் (Chorus Singer) தனது முரட்டுக் குரல் மற்றவர்களைக் குழப்புமோ என்று தானே சிந்தித்து, வாய்திறந்து பாடுவதோ, மானசீகமாகப் பாடுவதோ என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

10. பஜனை தொடங்குவதற்குக் குறைந்தது பத்து நிமிஷமாவது முந்தி ஆசனத்தில் இருந்து கண்களை மூடி நீண்ட சுவாசம் (Long Breath) செய்து அல்லது நாமத்தையோ அல்லது காயத்திரி மந்திரத்தையோ மானசீகமாகச் சொல்லி மனத்தை ஆயத்தம் செய்தல் நல்லது. தவிர்க்க முடியாத காரணங்களால் பிந்தி வருபவர்கள் மண்டபத்தில் ஏற்கெனவே இருக்கிறவர்களின் வசதியைப் பாதிக்காமல், அவர்களின் ஒருமுனைப்பாட்டிற்குப் பங்கம் விளைவிக்காமல் அமைதியாகப் பின்வரிசையில் இருந்துகொள்ள வேண்டும்.

11. யாரை பஜனைப்பாட்டுத் தலைவராய் (Bhajan Leader) அனுமதிப்பது என்ற கேள்வி சிலவேளைகளில் கேட்கப்படுகின்றது. நிச்சயமாக, தகுதியுள்ளவர்களைத்தான். பஜனையைக் கேட்டு மனத்திலே ஒரு சாந்தமான நிலையை ஏற்படுத்திக்கொள்ள அடியார்கள் விரும்புவார்கள். தங்களிலே பழக முயற்சிப்பவர்களை மனமார அனுமதிக்க மாட்டார்கள் பஜனை பாடிப் பழக முயற்சிப்பவர்களுக்கு நிலைய நிர்வாகத்தினர் ஏற்ற வசதிகளை (உதாரணம்:- பஜனைப் பயிற்சி) செய்து கொடுக்கவேண்டும். பஜனை பாடும் ஏகபோக உரிமை ஒருசிலருக்குத்தான் என்ற எண்ணம் எவர் மனத்திலும் எழ இடம் கொடுக்கப்படாது.

12. அடுத்த கேள்வி — குறிப்பிட்ட பாட்டுகள் மாத்திரம்தான் பாடவேண்டுமா? பக்தர்கள் அருமையான பஜனைப் பாட்டுகளை இயற்றுகிறார்கள். இவற்றை எமது பஜனைகளில் ஏன் பாடுகிறார்களில்லை என்ற கவலையும் சிலருக்கு உண்டு. சொந்த உணர்ச்சிகளை வீட்டு பல கோணங்களில் இருந்து இது ஆராயப்படவேண்டும். முன்பு குறிப்பிட்டதுபோன்று சத்ய சாயி நிலையங்களின் பஜனை என்பது ஒரு கூட்டு முயற்சி. கூட்டாக ஒன்றைச் செய்யும்பொழுது சில கட்டுப்பாடுகள் தவிர்க்கமுடியாதவை. எல்லோரும் சேர்ந்து பாடுவதற்கு, எந்த நிலையத்திற்குப் போனாலும் ஒரு பொதுவான பாட்டுத்தொகுப்பைப் பயன்படுத்துவது உதவியாகவிருக்கும். அந்தப் பாட்டுத்தொகுப்பை ஒவ்வொரு தனிப்பட்ட சத்திய சாயி நிலையமும் தயாரிக்காமல் ஒரு மத்திய ஸ்தாபனத்திடம் விடுவது சாலச் சிறந்தது. காலப்போக்கில் புதிய பாடல்கள் ஆமோதிக்கப்பெற்று பஜனைப் புத்தகங்களில் வெளிவருவதை அவதா

னிக்கிறோம். இறைவனின் குணாதி சயங்களை விமர்சிப்பதை விடுத்து, இறைவனின் நாமங்களையே இலகுவான பாடல்களில் அமைத்துப் பாடுவது நல்லதென்பது பகவான் பாபாவின் கருத்து. இறைவனை அளக்க நாம் யார்?

13. இன்னுமொரு கேள்வி — எந்த ஒழுங்கில் பாட்டுக்கள் பாடவேண்டும்? எல்லா இடங்களிலும் பிள்ளையார் பாட்டுடன் ஆரம்பமாக்கப்படுகின்றது, கடைசியாக சர்வமதப் பாட்டைப் பாடுவது பஜனையின் முடிவைக் குறிப்பதாக வழக்கத்தில் வந்துவிட்டது. அந்த வழக்கம் தொடர்ந்தும் நடப்பது நல்லது. இடையில் எந்த நாமத்தையும் பாடலாம். ஆனால் இந்த நாமங்களையும் நிரல்படுத்திப் பாடுவது இலங்கையில் ஒரு சம்பிரதாயமாக வந்துவிட்டது.

14. பாட்டுத்தலைவர் தான் பாடும் பாட்டை மனப்பாடம் செய்து பஜனைப் புத்தகத்தைப் பார்க்காமல் பாடவேண்டும். மற்றவர்களும் அப்படிப் பழகிக்கொண்டால் நல்லது. ஒருமுனைப்பாட்டை விருத்திசெய்யும் அஷ்டோத்திர சத நாமாவளியைப் பல வருடங்களாகப் பாடியும் இன்னும் பலர் புத்தகத்தைப் பார்த்தே படிக்கின்றனர். சிறிது முயற்சிசெய்தால் மனப்பாடம் செய்துவிடலாம். நாமாவளிகளின் கருத்தையும் உணர்ந்து படிக்கவேண்டும். தேவையான பொருள் விளக்க நூல்கள் உண்டு.

15. பஜனை நடைபெறும்பொழுது பகவான் பாபா மேடையில் அமர்ந்திருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டால் எல்லாம் திருப்தியாக நடைபெறும்.

ஜெய் சாயிராம்.

# சாயி பஜனை

**(பண்ணிசைப்புலவர் வே. சிவஞானம் அவர்கள்)**

சாயி பகவான் வகுத்து எங்களுக்கும் தந்து தானும் செய்து காட்டும் சாதனா மார்க்கம் பஜனை. இறைவனின் பல நாமங்களை இனிமையான மெட்டுக்களில், இலகுவான தாளங்களில் அமைக்கப்பட்ட பாடல்களைக் கொண்டதே இந்த பஜனைகள்.

சுவாமி, கருத்துள்ள பாடல்களையும் தன் பேச்சுக்களின் இறுதியில் பாடுவதுண்டு. ''பஜன பினா சுக சாந்தி நஹி'' ''பிரேம முதித மனசே'' என்ற பாடல்கள் அடிக்கடி அவரால் பாடப்படுபவை ஆகும். நாமங்களை மாத்திரம் கொண்ட பாடல்களையும் பாடுவார் சுவாமி.

கருத்துள்ள பாடல்களை காலமாற்றம் செய்து பாடுவது குறைவு. இல்லை எனலாம். நாமங்களைக் கொண்ட பாடல்களைக் காலப்படுத்தி விறுவிறுப்பாக உற்சாகம் கரைபுரண்டோடும்படி பாடுவார். உதாரணம் - ''சுப்பிரம் மண்யம் சுப்பிரம் மண்யம்'' ''கோவிந்த கிருஷ்ண ஜெய்''.

அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்தபின்பு சுவாமி சொன்னது தமிழர்கள் நல்ல பக்தர்களாக விளங்குவதற்குக் காரணம் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் என்று. இதன் கருத்து, பொருளை இலகுவாகப் புரிந்துகொண்டு பக்தி பாவத்துடன் பாடக்கூடிய பாடல்கள் திருவாசகம் என்பதே. சுவாமி போதிக்கும் ஞானக்கருத்துக்கள் திருவாசகத்தில் பரந்து செறிந்து நெஞ்சுருக்கும் வண்ணம் அமைந்திருப்பதேயாகும். தமிழருக்குத் தமிழ்

மொழியிலேயே பக்தியும் ஞானமும் புதைந்துள்ள அரிய பாடல்கள் கிடைத்துள்ளன என்பதும் ஆகும். பக்தி பண்ண ஒரு தொகுதி பாடல்கள், ஞானத்திற்கு இன்னொரு தொகுதி பாடல்கள் என்ற சிரமங்கள் இல்லாமல் இரண்டையும் ஒருங்கே பெறக்கூடிய அரிய பொக்கிஷம் என்பதும் ஆகும்.

சாயி நிலையங்களிலும், பஜனை நிலையங்களிலும் பஜனையின் தரம் உயர்த்தப்படவேண்டும் என்பது எல்லோரது பொதுவான அபிப்பிராயம் ஆகும். அதற்குத் தேவைப்படுவன — குரல் வளம், இசை அறிவு, பக்தியுடன் பாடும் இயல்பு, தரமான கருத்தமைவுள்ள பாடல்கள், தகுந்த பக்கவாத்தியங்கள் — ஆர்மோனியம், மிருதங்கம், தப்ளா, கடம், கஞ்சிரா, தாளங்கள், இவைகளை அளவாக இயக்குதல், இவைகளை நெறிப்படுத்த இயக்குநர் ஆகியவையாம்.

முழு பஜனையும் ஒரே சுருதியில் அமைவது உத்தமம். ஒரே அமைப்பினுள் ஒலி அலைகள் நிலவுவது மன அமைதியைப் பேணும் பொதுவாக 5½ கட்டை சுருதி பொருந்தும். இது ஆண்குரலுக்கும் பெண்குரலுக்கும் ஒத்துவரும். ஏதாவது ஒரு பொதுச் சுருதியில் அமைப்பது மிகமிக அவசியம். பாடல்களை சுருதிக்கேற்றால்போல ஆண்களும் பெண்களும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் பஜனையின் தொடக்கம் முதல் முடிவுவரை கேட்பவர் காதுகளில் ஒரே நாதம் பரிமளிக்கும்படி அமையவேண்டும். தம் குரல்வளத்திற்கு ஏற்றபடி சில பாடல்களைத் தெரிவுசெய்து அவற்றையே பாடுவதுதான் பகவான் எமக்குக் காட்டித் தந்த வழி. புதிய பாடல்களைப் பாடவேண்டும் என்ற உற்சாகத்தில், சரியான பயிற்சி இல்லாமல் பாடி பஜனையின் தரத்தைக் குறைப்பதை நிலையங்களில் காண்கிறோம்.

பாடகரின் குரல் அளவுக்கமைய பக்கவாத்தியங்கள் ஒலிக்க வேண்டியது மிகமிக அவசியம்.

வெவ்வேறு சுருதிகளில் பாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படின் பிரதான வாத்தியமான ஆர்மோனியம் அந்த ஸ்ருதியை சில வினாடிகள் ஒலிக்கச்செய்து, பாட்டின் முதல் வரியை வாசித்தபின் பாட ஆரம்பிக்கலாம். இது கேட்டுக்கொண்டிருப்பவர்களைப் பக்குவப்படுத்தி இசைவிக்கும். எக்காரணம் கொண்டும் பாட்டுக்குரிய முதல் ஸ்தானம் வழங்கப்பட்டேயாக வேண்டும். பாடுபவர்களும் சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து பாடவேண்டும். இவ்வுணர்வை இசை அழுத்த வேண்டுமே தவிர ஆழ்த்திவிடக்கூடாது. தனியாகத் தன் திறமையை மாத்திரம் வெளிக்காட்ட யாரும் முற்படக்கூடாது. கூட்டு முயற்சியிலேயே வெற்றியுண்டு.

குரல்வளத்துடன் இசை அறிவுங் கொண்ட பாடகர்கள் கிடைப்பது அரிது தான். மற்றவர்கள் பயிற்சி பெற்றுப் பாடவேண்டும். வாத்தியங்களை இசைப்பவர்களும் அனுசரணையாக வாசிக்கவேண்டும். குரல்களை மூடிவிடாமல் இருக்கவேண்டும். தாளம் போடுபவர்களும் குரல்களைவிட ஓங்கி ஒலிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பாடகர்களையும், வாத்தியக்காரர்களையும் வழிநடத்துபவரின் சேவை வெகு முக்கியம். பஜனையின் தரம், கட்டுப்பாடு எல்லாம் அவரின் முழுப் பொறுப்பிலேயே தங்கியுள்ளது. பயிற்சிகள் மிகமிக அவசியம். மொத்தத்தில் நல்ல பாடல்கள், நல்ல பாடகர்கள், நல்ல பக்க வாத்தியங்கள், நல்ல பயிற்சி, நல்ல வழி நடத்தல் ஆகியன மிக அவசியமாகத் தேவைப்படுவனவாம்.

பாடல்கள் தன்மொழிப் பாடல்களா யிருத்தல் வேண்டும். மனதை அங்குமிங்கும் அலைக்காமல் பொருளில், அது தரும் உணர்வில் ஆழச் செலுத்தும்.

ஒரு பஜனை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வரும் பக்தர்களை பஜனையில் முழுமையாக ஈடுபடுத்தி, இறைவனை நினைக்கவைப்பதே பஜனையின் முக்கிய நோக்கம். ஆகவே பஜனையில் பாடுபவர், பக்கவாத்தியகாரர், வழிநடத்துபவர் ஆகிய எல்லோரும் ஒன்றுசேர்ந்து பஜனை என்ற சாதனையை பக்தர்களுக்குச் செய்யும் சேவையாகக் கருதி முயற்சிசெய்து தங்கள் தங்கள் நிலையங்களின் பஜனைத் தரத்தை உயர்த்தவேண்டுமென விரும்புகிறோம்.

# பாரம்பரியத்தைப் பேணுவோம்

ஸ்ரீ J. ஜெகதீசன் அவர்கள்
(தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய இணைப்பாளர்)

இற்காலத்திய வாழ்க்கை முறை வருந்தத்தக்கதாய் உள்ளது. நீண்ட காலமாக உலகில் பேணப்பட்டுவந்த மரபு நெறிகள், சமய ஒழுக்கங்கள், இலட்சிய நோக்குகள், பண்பாட்டு முறைகள் எல்லாம் இன்றைய இல்லங்களில் செல்வாக்கு இழந்துபோயுள்ளன. கிறிஸ்தவ, இந்து, பௌத்த, இஸ்லாம் முதலான தொழுகைத் தலங்களுக்கு நிறையப்பேர் போய்வருகிறார்கள். ஆனால் அவர்கள் மேற்கூறிய பாரம்பரியங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இல்வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றுவது இல்லை.

'இல்லம் ஓர் ஆலயம்' என்று முன்னோர் கருதினர். பகவான் பாபா இதை நித்தமும் வற்புறுத்துவார். இல்லத்தை வழிபாட்டுத் தலமாக்க வேண்டும் என்று எல்லோரும் கூறுகின்றனர். அதன்படி அதைப் புனிதமாக்க முயல்வதுதான் அரிது. மரபு நெறிகள், சமய ஒழுக்கங்கள், பண்பாடுகள் ஆகியவற்றின் அத்திவாரமும், ஆரம்பமும் வீடேயாகும்.

ஆகவே பாபா வற்புறுத்திக் கூறுவதற்கு ஏற்ப சாயி இயக்கமானது பக்தர்களைத் தத்தம் பண்பாட்டு நெறிகளுக்கு மீள அழைத்துச் செல்ல வேண்டும்.

அநேகமான வெளியுலக நாடுகளிலுள்ள பாலவிகாஸ் பிள்ளைகளிடம் இக் குறைபாட்டைக் காணலாம். வெளியுலக நாடுகளில் பாலவிகாஸ் வகுப்புகளில் ஆன்மீகக் கல்வி பயிலும் பிள்ளைகள், சாயி நிலைய நிகழ்ச்சிகளில் சூரர்களாயிருப்பார்கள். தத்தம் சமயத் தலங்களுக்குப் போனால் அங்குள்ள அனுஷ்டான முறைபற்றி ஏதுமறியாது திகைப்பார்கள். இதைச் சாயி அடியார்கள் அவதானித்து இருக்கலாம். இந்து, பௌத்த, கிறிஸ்தவ சூழ்நிலை எதற்கும் இது பொருந்தும். சமயானுஷ்டானங்களைப்பற்றி அவர்களுக்கு அறிவு இல்லை என்றே கூறலாம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய இந்திய, சீன மரபுகளின் சமயப் பண்பாட்டு இலட்சியங்களும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவரும் ஐரோப்பிய மரபுகளும், சமயப்பண்பாட்டு இலட்சியங்களும் இன்றைய பரம்பரையின் காலத்திலேயே நிர்மூலமாகிவிடுமோ அல்லது பொருளற்ற வெற்றுச் சடங்காகிவிடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது. இன்று வளர்ந்தவர்களுக்கு சமய ஒழுக்கங்கள் புரிவதில்லை; இளைஞர்களுக்கு அவற்றைப்பற்றி அக்கறை இல்லை.

இன்றைய இளைஞர்களின் இலட்சிய புருஷர்கள் ஹொலிவூட், பொலிவூட், ஹொங்கொங் முதலிய நகரங்களில் உள்ள சினிமா ஸ்ருடியோக்கள் உருவாக்கும் நடிக நட்சத்திரங்களாயிருப்பார்கள் அல்லது பொப்பிசைப் பாடகர்களாக அல்லது நடனக்காரர்களாக இருப்பார்கள். மிகச் சிலரே தங்கள் சொந்த சமய, பண்பாட்டுப் பாரம்பரியங்களில் உதித்த தீரர்களை அறிந்தவர்களாவர்.

பாபா உபதேசிக்கும் உயர் மனித மேம்பாடுகள் உண்மையில் அந்தந்த சமய பண்பாட்டு மரபுகளில் அடங்கி இருக்கின்றன. வீட்டு வாழ்க்கை முறையோடு அவை பின்பற்றப்பட்டால் மனித மேம்பாடுகள் நிச்சயம் புத்துயிர் பெறும். இல்லம் மேம்பாடுகளின் பிறப்பிடமாக மலரும்.

மரபு வழிவந்த பண்பாட்டுப் பழக்கங்களின் சிதைவை விளக்க ஒரு சிறிய உதாரணம் போதுமானது. கீழைத்தேச நாடுகளான இந்தியா, சீனா, மலேசியா போன்ற நாடுகளின் பாரம்பரிய வழக்கங்களில் ஒரு பரம்பரைக்கு முன்வரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழக்கம் இது. பெற்றோர்கள் வீட்டுக்கு வந்த பெரியவர்களுடன் கூடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அந்த வீட்டு இளைஞன் வீட்டுக்கு வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் அவர்கள் முன்னிலையில் மன்னிப்புக்கோருவதுபோலத் தலையைத் தாழ்த்தி பணிவுடன் கைக்குறிப்புக் காட்டிவிட்டுத்தான் அவர்களைக் கடந்து உள்ளே செல்வான். இன்று இந்தப் பழக்கம் மேற்கூறிய நாடுகள் எதனிலும் இல்லை.

அவதாரத்தின் அறைகூவலை ஏற்றுக்கொண்டு இன்றைய சமுதாயத்துக்குப் பரிதாபமாகத் தேவைப்படுகின்ற மரபு வழி வந்த அன்றாட வாழ்க்கைப் பழக்கங்களை, பாரம்பரிய இசையை, நாட்டியத்தை, உடையை, குடும்பப் பிரார்த்தனையைப் புத்துயிரூட்டி வளர்க்கவேண்டும்.

சத்திய சாயி நிறுவனங்களிலுள்ள மகளிர் பிரிவு பாபாவின் அறைகூவலை ஏற்று பொங்கும் அலைபோல எழுந்து புத்துயிரூட்டும் சக்தியாக மாறவேண்டும். பெண்கள் இல்வாழ்க்கையில் மரபு நெறிகளையும், சமய ஒழுக்கங்களையும், சீரிய நோக்குகளையும், பண்பாட்டையும் கட்டிக்காத்துத் துலங்கவைக்கும் தீபங்களாக வேண்டும் என்று பாபா வேண்டுகோள் விடுத்துள்ளார். இதைச் சிரமேற்கொண்டு பொறுப்பையேற்று இனிவரும் பரம்பரைக்கு எமது அரிய மரபுச் சொத்தைப் பேணிக் காத்து ஒப்படைப்போமாக.

தமிழாக்கம்: ஸ்ரீ V. K. சபாரத்தினம்

## பசி என்ற பிணிக்கு மருந்தே உணவு

உணவு என்பது புனிதமான சடங்காகும்; யக்ஞமாகும். கவலை, ஏக்கம், உணர்ச்சி வசப்பட்ட நிலை இவைகள் குடிகொண்டிருக்கும்போது உணவு அருந்துதல் கூடாது. பசி என்ற பிணியை நீக்கவும், உயிர் வாழ்தலுக்கு உரமளிக்கவும் ஏற்பட்ட மருந்தாக உணவு கருதப்படவேண்டும்.

— பாபா

(வித்யா வாஹினியிலிருந்து)

# சாயி பஜனை அனுபவங்கள்

ஸ்ரீமதி ம. நவரத்தினம்

கடந்த இருபது ஆண்டு காலமாகப் பஜனையில் முக்கிய பங்கேற்று சாயி பஜனை களை மிகவும் மகிழ்ச்சியுடன் பாடும் எனது அனுபவங்களை சாயி பக்தர்களுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பை எனக்கு சுவாமி இம் முறை தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாயிநிலையங்களில் வாரந்தோறும் நடை பெறுவது பஜனை. ஆன்மீகத்தின் ஆரம்ப சாதனையும் இதுவெனக் கூறலாம். பக்திச் சுவை சொட்டச்சொட்ட இராக, பாவ (Bhava) தாளத்துடன் பாடப்படவேண்டி யது சாயி பஜனை. எனது அனுபவத்தில் ஆரம்ப காலங்களில் அப்படியான பஜனை யைக் கேட்கக்கூடியதாக இருந்தது, திருமதி சரஸ்வதி பாக்கியராசாவின் பஜனைப் பாடல்கள் பாடப்படும் இடங்களில் மக்கள் திரண்டிருந்து பாடி மகிழ்வதைக் கண்டிருக் கிறேன். சிவராத்திரி வேளையில் இரவு முழுவதும் அவரது பஜனைப் பாடல்களைக் கேட்கலாம். சமித்திகளில், ஆலயங்களில், மகளிர் பஜனைகளில், நகர சங்கீர்த்தனங் களில் அவரது குழு பஜனைப் பாடல்களை இசைத்தவண்ணம் இருப்பதைப் பார்க்க லாம்.

என்ன காரணத்தினால் அவரது பஜனை இவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதை ஆராயும்பொழுது, பல காரணங்களை அதற்கு ஏதுவாகக் கூறலாம். பஜனையை ஒருவர் பாடும்போது சொற்பிரயோகங்கள் தெளிவாக உச்சரிக்கப்படவேண்டும். பாடும் போது கருத்தை மனதில் பதித்துக்கொண் டால் தன்னை அறியாது இறைபக்தி அங்கு உருவாகும். அத்தோடு சிறிதளவேனும் குரலில் இனிமை இருக்கவேண்டும். பின் இராக, தாளத்துடன் பஜனை பாடப்பட வேண்டும். நாங்கள் முக்கியமாக பஜனை பாடும்போது, பின்னிருப்பவர்கள் சிறந்த முறையில் அதைத் திருப்பிப் பாடவேண்டும். இவ்வளவு முக்கிய அம்சங்களும் திருமதி பாக்கியராசாவின் பஜனையில் உண்டு. இலங்கையிலேயே சிறந்த பஜனை அமைப் பாளராகவும், பாடகராகவும் அவர் இருந் தமைக்கு இவற்றையே காரணங்களாகக் கூறலாம்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன், நந்தா வில் அம்மன் கோவிலில் சிவராத்திரி அன்று நடுச்சாமப் பூசையின்பின் அவரது குழு பஜனை பாடியது. மக்கள் பெரும்பாலும் தூங்கிவழியும் நேரம். பஜனை தொடங் கியது. தம்பி காலஞ்சென்ற விநாயகேந் திரன் (அப்பி) மிருதங்கம் வாசித்தார். மிக வும் உஷாரான நிலையில் பாடல்கள் (ஏற் கெனவே தெரிந்து எடுக்கப்பட்டவைகள்) பாடப்பட்டன. தூங்கிவழிந்த மக்கள் அங்கே கையில் தட்டிப் பின்னணி பாடத் தொடங்கிவிட்டார்கள். பஜனை முடிந்து நாங்கள் வரும்போது புகழாரங்கள் சூட்டப் பட்டதை நான் நேரடியாகக் கண்டேன். எங்கெங்கே, எப்படி, எப்படியான பாடல் கள் பாடவேண்டும் என்று தெரிந்து எடுத் துப் பாடுதல் வேண்டும். தொகையறா பாடும் திறமை உடையவரைப் பார்த்து விட்டு பாடமுடியாதவர்கள், தொகையறா பாடி, பஜனையைத் தங்களுக்குத் தெரிந்த இராகத்தில் பாடி பாடலையும் கொலை செய்கிறார்கள்.

கடந்த காலங்களில் கொக்குவிலில் இருந்து நல்லூரை நோக்கி நகரசங்கீர்த்தனம் செல்வது வழமை. எப்பொழுதும் 10ஆம் திருவிழா அதிகாலை 4-30 மணிக்கு கொக்குவில் கிருபாகர சுப்பிரமணியர் (புதுக்கோவிலில்) இருந்து நகரசங்கீர்த்தனம் தொடங்கும் "விடியப்பறத்தில் கத்திப் போகுதுகள்" என்று சில சோம்பேறிகள் பேசுவதும் உண்டு. ஆயின் பல மக்கள் ஆதரவு தந்து அக்கோஷ்டியுடன் பின்னால் பாடி வருவதும் உண்டு. நல்லூர் முருகன் ஆலயத்தை அடையும் வரை பாடல்களில் தளர்வோ, சுருதி பேதமோ இன்றி பஜனை அமைந்திருக்கும். 20 பாடகர்கள் முக்கிய பங்கு ஏற்பார்கள் பின்னணி பாடுவதற்கு அநேக மக்கள் கூடி விடுவார்கள். பக்தியுடன் முருக பஜனைகள் அங்கே பாடப்படும் கொக்குவிலில் இருந்து கோஷ்டியாகத் தாவடிக்கு மோட்டார் வண்டியில் சென்று. தாவடிப் பிள்ளையார்கோயிலில் தொடங்கி ஒரு பெரும் பகுதியைச் சுற்றி நகரசங்கீர்த்தனம் தாவடி அடியார்களுடன் இணைந்து செய்நதும் உண்டு. இவர்களுக்கு கல் எறிய வேண்டும் என்று கத்தியவர்களும் உண்டு. நல்ல காலம் எறியவில்லை.

இன்று பகவானைப் பற்றியும், பகவானுடைய பஜனைகள் பற்றியும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்குத் தெரியும். அன்றைய நிலையில் அநேகமக்களுக்கு சாயி பகவானைப் பற்றித் தெரியாது. பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் பஜனை பாடப்பட்டது. மக்கள் பஜனையால் ஈர்க்கப்பட்டனர். என்ன பஜனையாக இருந்தாலும் பரவாயில்லை கேட்க இனிமையாக இருக்கிறது என்று கேட்டவர்களும் உண்டு. சாயி என்று நாமம் தப்பித்தவறி கோயிலில் பாடப்பட்டால் அடிக்க வந்தவர்களும் உண்டு. அறியாமை என்ற இருள் அகல அகல மக்கள் விழிப்படைந்து சிறிது சிறிதாக சாயிபஜனைகளில் கூடுகிறார்கள். எல்லோரும் பஜனை பாடலாம் என ஒரு சிலர் எண்ணுகிறார்கள். எனது அனுபவத்தின் படி சங்கீத ஞானம் இல்லாத என்னிலும் பார்க்க, மூத்த ஒரு சிலர் சுருதி பேதமின்றி லய ஞானத்துடன் பஜனை பாடுவதை இன்னமும் காண்கிறேன் அவர்கள் 15 ஆண்டுகள் வரையில் திருமதி பாக்கியராசாவுடன் பின்னணி பாடி, பஜனைபாடி முன்னணியில் பகவானைப் பாடித்துதிப்பவர்கள.

ஒரு சிலர் குறிப்பிட்ட அடியார்கள் மட்டும் தான் பஜனைபாடலாம் என சமிதிகளில் சில விதிகளை வகுக்கிறார்கள் இறைநாமம் கூறுகிறோம். எம்மில் அகங்காரம் இருக்கக் கூடாது. என்னிடம் ஞானம் இருந்தால் கட்டாயம் அடுத்தடுத்துக் கொடுக்கும் பயிற்சிகள் மூலம் மற்றவர்களையும் முன்னேற்றலாம் ஒரு சிலர். பலராகக் கூடிப் பாடலாம். பயிற்சி மூலம் பலரைப் பஜனை பாடவைக்கலாம் அன்றியும் பல குழந்தைகள் பயிற்சிமூலம், சிறந்த பஜனைகளைப் பாடுகிறார்கள் ஆதலால் சங்கீதம் தெரிந்தவர்கள்தான் பஜனை பாடுதல் வேண்டும் என்ற ஒரு சிலரின் அபிப்பிராயங்கள் என்னைப் பொறுத்தவரையில் தவறு என்றே கருதுகிறேன். சங்கீதம் தெரிந்தவர் தெரியாதவர்களை உருவாக்கலாம். இங்கே ஆண்டவனை வேண்டுவதற்கு எமது வித்துவத்தன்மை தேவையில்லை அன்பும், பக்தியும், இருந்தால் ஆண்டவனை பாடித் தொழலாம்.

சங்கீதம் படித்த பலர் பாடல்களை நான் கேட்டிருக்கிறேன் சங்கீத ஞானம் அங்கே சிறிதும் மிளிரவில்லை. இப்பொழுது ஒரு ராகத்தில் தொடங்கி இன்னுமொரு ராகத்தில் பஜனையை முடிப்பவர்களும் உண்டு.

பஜனைப் பாடல்களை மத்தியஸ்தாயி, மேல்ஸ்தாயிகளில் பாடும்பொழுதும், மந்திரஸ்தாயியில் இறக்கிப் பாடும்பொழுதும் அனுபவமில்லாதவர்களுக்கு அனுபவமுள்ளவர் ஒத்துழைப்பு வழங்கலாம். குரல்

கொடுத்தும் உதவலாம். சேர்ந்தும் பாடலாம். சங்கீதம் தெரிந்தவர்கள் கர்வமின்றி மற்றவர்களுக்கு உதவலாம் கல்யாணி, மோகனம், ஹம்சத்வனி ராகங்களில் அமைந்த பஜனைப் பாடல்களை திருமதி பாக்கியராசா அவர்கள், குரல்வளம் உள்ள வர்களுக்குக் கற்பித்திருக்கிறார். அவர் ஒரு சங்கீத பூஷணம். பல்கலைக்கழக நுண் கலைப் பிரிவின் விரிவுரையாளர். இருந்தும் ஒருசிறிதும் கர்வமின்றி தெருவில் நகர சங்கீர்த்தனம் செய்தார். பகவானின் அருளை நிறையப் பெற்றார். இன்னும் பெற்றுக்கொண்டே இருக்கிறார். ஆதலால் கடவுளின் நாமத்தை போட்டி, பூசலின்றிப் பாடத் தெரிந்தவர்கள் பாடலாம். அவர்ளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பயிற்ற வேண்டும். பயிற்சி இல்லாமல் பாடமுடியாது. ஆதலால் கற்றுத்தேர்ந்த சங்கீத வித்துவத்தன்மை உள்ளவர்கள் சாயி பஜனைகளில் முன்னின்று பாட வரவேண்டும். மற்றவர்களுக்கும் அதைப் பயிற்சிபண்ணிக் கொடுக்கவேண்டும். நாம சங்கீர்த்தனம் கலியுகத்திற்கு கட்டாயமாகப் பாடப்பட வேண்டும். ஆதலால் பேதம், பிரிவினை, உயர்வு, தாழ்வு என்று எமக்குள் இருப் பவைகளை அகற்றி உயர்ந்த நோக்குடன் சாயி பஜனை பாடுவோம்.

---

## அர்த்தம் புரிந்து பாடுங்கள்

தியாகராஜரின் கீர்த்தனைகளைப் பாடுவதிலும்கூட சரியான வழியில் அவைகளைப் புரிந்துகொள்ளாமல் அவைகளின் மேன்மையைக் கெடுத்துவிடும் பாடகர்கள் பரவலாக உள்ளனர். தியாகராஜர் தெலுங்கு மொழியில் பாடல்கள் அமைத்துள்ளதால் தெலுங்கு பேசுபவர்களே அதைச் சரியாகப் புரிந்துகொண்டு 'பாவ'த்தைப் பின்பற்ற முடிகிறது. ஆனால் தமிழர்களோ 'ராக' 'தாளம்' இரண்டிலும் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளனர். அர்த்தம் புரிந்துகொள்பவர்கள் தெலுங்கர்கள். ராக, தாளத்துடன் பாடுபவர்கள் தமிழர்கள். தெலுங்கர்களுக்கு ராக, தாளத்தில் அதிக தேர்ச்சியில்லை. தமிழர்களுக்கோ சாகித்தியத்தின் அர்த்தம் புரிவதில்லை. அதனால் தியாகராஜ கீர்த்தனையின் சாரமே குலைந்துபோய் விடுகிறது.

ஒருசமயம் தியாகராஜர் ஒரு பாடலில் ''நே பொகடுதுண்டே நீகேமிரா ராமா'' ''நான் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தால் உனக்கென்ன ராமா'' என்ற கருத்தே இதில் அடங்கியுள்ளது. ஆனால் தமிழர் ஒருவர் தெலுங்கு மொழியை அறியாதவர். வார்த்தை உச்சரிப்புச் சரியில்லாமல் ''நே பகோடா திண்டே நீகேமி'' ''நான் பகோடா தின்றால் உனக்கென்ன'' என்ற அர்த்தம் வரும்வகையில் இதைப் பாடினார். அர்த்தம் புரிந்துகொண்டால்தான் 'பாவ'த்துடன் பாடமுடியும். தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு பாடவேண்டும். இதுவே கீர்த்தனத்தைப் பாடும் சரியான முறை.

— பாபா

ச. சாரதி (தமிழ்) மார்ச் 1992 பக்கம் 14

எமது சில பஜனைகளிலும் அர்த்தம் புரியாமல் மந்திர உச்சாடனங்களையும், பாடல்களையும் பாடகர்கள் பாடுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இத் தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். உதாரணமாக:- ஒரு பஜனைப் பாடலில் ஒரு வரி: ''இராவண சம்ஹார கோதண்ட ராமா'' என்று வருகிறது. ''இராவணனைச் சம்ஹாரம் செய்த கோதண்ட ராமா'

என்பது கருத்து. ஆனால் சில பாடகர்கள் ''இராவண சம்சார கோதண்ட ராமா'' என்று பாடுகிறார்கள். அதாவது ''இராவணனுடைய சம்சாரமான கோதண்ட ராமா'', எப்படியுள்ளது குளறுபடி?

சில பிரபல்யமான விநாயகர் பாடல்களில் ''விக்ன விநாஷக'' என்று வருவதை அறிந்திருப்பீர்கள். அதாவது ''விக்கினங்களை நாசம் செய்பவர்'' என்பது கருத்து. பல முன்னணிப் பாடகர்கள்கூட இதனை ''விக்ன விநாயக'' என்று பாடுவதைக் கேட்டிருப்பீர்கள். இதன் கருத்து ''விக்கினமே உருவமாகிய விநாயகரே'' என்பது. விநாயகர் எப்படி எமது விக்கினங்களை (துன்பங்களை)ப் போக்குவார்?

மங்கள ஆரத்தி பாடும்போது ''ஓஜஸ்வி ஓ சாயி மகாதேவா'' என்பது பாடலில் உள்ள வரிகள், ''பிரமச்சரிய விரதம் அனுஷ்டித்து அதனால் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஜோதியை உடைய சாயி மகாதேவா'' என்பது கருத்து. ஒருசில இடங்களைத் தவிர அனேக பஜனைகளில் இந்த வரியை சரியாகப் பாடுவதில்லை. ''ஓம் சத்ய சாயி மகாதேவா'' என்று மாற்றிப் பாடுகிறார்கள். மிக அரிதான குணநலன்களுடன் கூடிய ஜோதியை பகவானில் பார்க்காமல் விட்டுவிடுகிறோம்.

அடுத்து விபூதி மந்திரம் சொல்லும் போதும் ''மோட்ஷப் பிரதாதம்'' என்று வருகிறது. ஆனால் அவற்றை 'பிரதானம்'' ''பிரசாதம்'' என்றெல்லாம் உருமாற்றி உச்சரிக்கப்படுகிறது. ''மோட்ஷப் பிரதாதம்'' என்றால் ''மோட்ஷத்தைத் தருவது'' என்பது பொருள்.

இன்னும் எத்தனையோ பிறமொழி பஜனைப் பாடல்களைப் பாடும்போது வேறு அர்த்தம் வரத்தக்கதாகப் பாடுகிறார்கள். பிறமொழிப் பாடல்களைப் பாடுமுன் அவற்றின் கருத்துக்களை அறிந்துகொண்டு பாட வேண்டும்.

ஜெய் சாயிராம்.

ஸ்ரீமதி ச. மதிவதனி

★

இக் கட்டுரை;

10-11-1997இல் அமரத்துவமடைந்த எமது அன்னை

**திருமதி பொன்னையா சின்னம்மா**

அவர்களின் நினைவாக எமது அன்புக் காணிக்கை.

பொ. நடராசா
பொ. விவேகானந்தன்
அண்ணா தொழிலகம்
இணுவில்.

# இலக்கைத் தெரிந்து கொள்வோம்

ஸ்ரீ *M. K.* சிவபாதஹிருதயர்

ஒரு முறை புத்த பகவானிடம் ஒரு சீடர்.

''வணக்கத்துக்குரிய குருவே தங்களைப் போல் ஒரு தலைசிறந்த குருவை இந்த உலகம் ஒரு பொழுதும் கண்டதே இல்லை''

'சொல்லுங்கள், இந்த உலகில் தோன்றிய எத்தனை குருமாரை நீங்கள் கண்டிருக்கிறீர்கள், அவர்கள் எத்தனை பேரின் போதனைகளை அறிந்திருக்கிறீர்கள்''

''இல்லை நான் ஒருவரையும் காணவில்லை. அவர்களின் போதனையைத் தெரியாது''

''அப்படியானால் உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தோடு ஒப்பிட்டு என்னை ஒரு பெரிய ஆசான் என்று சொல்லக் கூடாது''

''ஆனால் உங்கள் போதனைகள் மிகவும் எளிமையானவையும், உதவியானவையும், தலைசிறந்தவையும் பின் பற்றக் கூடியவையுமாகும்''

''சரி எனது போதனைகள் பின்பற்றக் கூடியவையானால் என்னைப் புகழ்வதிலும் பார்க்க அவற்றை நீங்கள் பின்பற்ற வேண்டும்; எனக்கு மரியாதை செய்வதற்காக அவற்றைப் பின்பற்றவேண்டாம். பிழையாக வெளிவேஷம் போட்டால் (நான் இல்லை என்று நினைத்து) என் போதனைகளுக்கு மாறாக நடப்பீர்கள்'

புத்த பகவான் தன் சீடனுக்குக் கொடுத்த எச்சரிக்கை வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வத்தின் சம காலத்தவர்களான எங்களுக்கும் (சத்ய சாயி அடியார்கள்) பொருந்தும். பகவானின் பேரன்பைப் பற்றிய எமது உணர்வு எங்கள் வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும். பகவானின் போதனைகளுக்கு அமைய எங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

என்னுடைய வாழ்க்கை தான் எனது செய்தி என்று சொன்ன பகவான் இன்று உன்னுடைய வாழ்க்கைதான் எனது செய்தி என்று (சாயி அடியார்களுக்கு) சொல்லியுள்ளார்.

அவருடைய செய்தியை அறியாமல் அதை அறிய ஆர்வம் காட்டாமல் நாம் நம் வாழ்நாளை வீண் நாளாக்கிக் கொண்டு இருக்கலாமா?

இப்பொழுது பகவான் சொன்ன ஒரு கதையைப் பார்ப்போம்.

ஒரு பல்கலைக்கழக மாணவன் கடிதம் வராவிட்டால் ஏக்கத்தோடு கடிதம் கொடுப்பவரைப் பார்ப்பான். கடிதம் வரவில்லையா என்று கண்கலங்கக் கேட்பான். அந்தக் கடிதம் கொடுப்பவரும், இவனைப் பார்ப்பவரும், ஒரு நல்ல மகன். தன் பெற்றோரின் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறான். இவனல்லவோ ஒரு நல்ல மகன். என்ன பாசம் என்று வியந்தனர்.

கடிதம் வந்தது ஆவலுடன் அதைக் கண்கலங்கப் பெற்றுக் கொண்டான். தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். தன் அறைக்குள் ஓடினான். உடனேயே சிரித்துக்

கொண்டு வெளியே வந்தான். எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டான்.

என்ன செய்தான்? கடிதத்தைப் பிரித்து பெற்றோர் அனுப்பிய மணிஓடரை எடுத்தான். தனது ''உறவுகளை'', ''புதிய உறவுகளை'' காணப் போய்விட்டான்.

பெற்றோர் அனுப்பிய கடிதத்தைப் படிக்கவே இல்லை. அதற்கு அவனுக்கு நேரம் இல்லை. ''எங்கள் குலக் கொழுந்தே எப்படியான ஒழுக்க முள்ளவனாக இருக்க வேண்டும். எமது குலத்துக்கு எப்படி பெருமை சேர்க்க வேண்டும்'' என்றெல்லாம் ஆசிகூறி, உபதேசித்து தங்கள் அருமருந்தன்ன புதல்வனுக்கு எழுதியிருந்தார்கள். மகன் அதைப்பார்த்தால் தானே? எப்படி இவனால் தன் பெற்றோர்களின் எதிர்பார்ப்பிற்கு அமைய வாழ முடியும்? பெற்றார்களின் எதிர்பார்ப்பே இவனுக்குத் தெரியாதே. அதை அறிந்து கொள்ள இவன் எந்த முயற்சியும் எடுக்க வில்லையே. அதை விட அவன் வளர்த்துக் கொண்ட 'வீணான உறவுகள்' ''சந்தைக் கூட்டங்கள்'' அவனுக்கு முக்கியமாகப் போய் விட்டதே. அந்த உறவுகளை மகிழ்விக்கத்தான் அவனது பெற்றோரின் பணம் தேவை. அவர்களின் அனுபவ உபதேசம் அன்பில் எழுந்த அறிவுரைகள் எதுவும் முக்கியமில்லை.

பகவானின் அன்பை, அருளைப் பெற்றுக் கொண்ட நாம், அதனால் உலக விஷயங்களில் பயனடைந்து நமது உறவுகளை - நமது, நான், எனது என்பவற்றை வளர்த்துக் கொண்ட நாம், அவரை, அந்த அருளைத் தந்தவரை அன்பை அருளியவரை மகிழ்விக்கப் பார்த்தோமா?

''வரம் வேண்டுமாம், ஆனால் அந்த வரத்தைத் தரும் பரமன் வேண்டாமாம். படைக்கப்பட்ட உலகம் வேண்டும். ஆனால் படைத்தவன் வேண்டாம். அந்தக் கைகள் அளிக்கும் செல்வம் வேண்டும் ஆனால் கைகள் வேண்டாம்''.

கீதவாஹினி அத். 3. பக் 22,

''நீங்கள், கைகளில், மனதில் நிறையக் குப்பை கூளங்களை வைத்திருந்தால் நான் தருவதை எப்படி வாங்குவீர்கள்''.

நீங்கள் கேட்பதையெல்லாம் நான் தருவது நான் தர இருக்கின்றவற்றை வாங்குவதற்கு உங்களைத் தயார் செய்வதற்கே. நாம் தயாராய் இருக்கிறோமா? என்ன தர இருக்கிறார் என்பதைப் பற்றி அறிய முயல்கிறோமா?

''தர்மஸம்ஸ்தா பனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'' என்றுதர்மத்தை நாட்டுவதற்கு யுகங்கள்தோறும் அவதரிக்கிறேன் என்று சொன்னவர் எமது காலத்தில் அவதரித்து சத்தியத்தை, தர்மத்தை, அமைதியை, அன்பை, அஹிம்சையை நிலைநாட்டுவதில் நாமும் பங்காளிகள் ஆகவேண்டாமா? வெறும் பார்வையாளர்களாகத்தான் இருப்போம் என்று அடம்பிடிப்போமா?

எனக்குத் தேவை முழுநேர பக்தர்கள் தான். பகுதிநேர பக்தர்களில்லை என்பதை அறிந்திருக்கிறோமா? அறிய முயற்சிக்கிறோமா?

சத்தியத்தைப் பார் - அது உன்னைக் காப்பாற்றும்!

தர்மத்தைச் செய் - அது தலைமுறைகளையும் காப்பாற்றும்!

தேடினோமா? தேடினால்தானே பெறுவதற்கு.

ஏன் தேடவேண்டும்? ஏன் தட்டவேண்டும்?

பரீட்சை என்றால் இலக்கு — பாட அட்டவணை

தொழில் என்றால் இலக்கு—சம்பளம், பதவி உயர்வு

வியாபாரம் என்றால் இலக்கு—லாபம், தொழில் வளர்ச்சி

ஆத்மீகம் என்றால் இலக்கு - தெரியாது, யாரும் சொல்லித் தரவில்லை.

எமக்குத் தெரியாத கடவுள் என்ற ஒருவரை ஏதோ ஒருசில தந்திரங்களால், உபாயங்களால் திருப்திப்படுத்துவதா? எங்களின் எங்களுக்குத் தெரியாமலே எங்களில் ஊறிப் போன உட்கருத்துக்களுக்கு இரை போடுவதில் திருப்திப்படுவோமா?

வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளிகளான நாம், வைத்தியருக்கே நமக்கு என்ன மருந்தென்று சொல்வோமா? அல்லது அவரே எமது நோயைப்பார்த்துத் தரும் மருந்தைப் பத்தியங்களுடன் ஒழுங்காகச் சாப்பிடுவோமா? அப்படியானால் தானே நமது நோய் மாறும். வைத்தியர் வந்திருக்கிறார். சர்வரோக நிவாரணிகளைத் தருகிறார். அவற்றை அவர் சொல்லும் முறைப்படி உண்ணுவோமா?

துரோணாச்சாரியாரிடம் வில்வித்தை பயின்ற அர்ஜுனனுக்குச் சரியான இலக்கு தெரிந்தது. அவன் வில்வித்தையில் சிறந்து விளங்கினான்.

''முத்தி நெறி அறியாத மூர்க்கராய்'' இருக்கிறோம். ''சித்தமலம் அறுவித்து, சிவமாக்கி, எமை ஆள அத்தன், எமக்கு அருளிய''வற்றை அறிவதுதான் வழி. அதைக் கடைப்பிடிப்பதுதான் வழி.

''தன்னுடைய தெய்வீகமான இயல்பைப் புரிந்துகொள்ளாதவன் பைத்தியக்கார நாயைவிடக் கேவலமானவன். மனித உடல் மாசு மறுவற்ற தூய ஆத்மாவின் வடிவம்தான் இதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.''

சனாதன சாரதி - ஆடி '94, பக்.4

இதுவே இலக்கு
இதுவே முத்திநெறி
இதுவே சித்தமலம் அறும் வழி
இதுவே சிவமாகும் வழி
இதுவே சிந்தை தெளிவாகும் வழி
இலக்கைத் தெரிந்து கொள்வோம்.

### பஜனையின் சிறப்பு

நாம சங்கீர்த்தனத்தையும், நகர சங்கீர்த்தனத்தையும் சாதனை செய்யும்படி நான் அழுத்திக் கூறுவதற்குக் காரணம் உண்டு.

இன்று சாதாரண மனிதனுக்கு ஆத்மீக போதனையும் விளக்கமும் அளிப்பவர்கள் தங்கள் அறிவுத் திறமையையும் வாதத் திறமையையும் எடுத்துக்காட்டவே முயற்சிக்கிறார்கள். அவர்கள் கொண்ட கொள்கையிலும், போதனையிலும், பயன்களிலும் முழு விசுவாசமற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அரிச்சந்திரன் நாடகம் நடிப்பவர்கள்.

— பாபா

ஆதாரம்: Sathya Sai Speaks—Vol. VI Page 256.

# தலைமை ஆசிரியருக்கு ஒரு தந்தையின் கடிதம்

[ ஆபிரகாம்லிங்கன் உலகில்தோன்றிய தலைசிறந்த அரசியல் ஞானிகளில் ஒருவர். 1861—1865 ஆண்டு காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர். அவருடைய இலக்கியச்சுவை நிறைந்த எழுத்தும், மக்களால், மக்களுக்காக, மக்கள் நடத்தும் ஆட்சிமுறைக்கு அவர் அளித்த அதி முக்கியத்துவமும், அவருடைய வாழ்க்கைமுறையும், அகால மரணமும் சரித்திரத்தில் அவருக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன. பகவான் பாபா தனது சொற்பொழிவுகளில் அவரை மிக உயர்வாக அடிக்கடி குறிப்பிடுவார்.

தனது மகன் கல்வி கற்றுக்கொண்டிருந்த பாடசாலையின் தலைமை ஆசிரியருக்கு ஆபிரகாம் லிங்கன் எழுதிய கடிதம் ஒன்று கீழே உள்ளது. யார்மீதும் குரோதம் பாராட்டாது, அனைவருக்கும் தயவு காட்டும் அவர் சுபாவத்தைக் கடிதத்திலே காணலாம் ]

எல்லோருமே நீதியானவர்கள் அல்ல, எல்லோரும் உண்மையானவர்களும் அல்ல என்பதை அவன் (மகன்) கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் அயோக்கியன் ஒருவன் இருக்கும்போது வீரமுள்ளவனும் இருக்கவே செய்வான் என்பதையும், ஒவ்வொரு சுயநல அரசியல்வாதிக்கும் பதிலாக கொள்கைப் பற்றுள்ள தலைவனும் இருக்கவே இருப்பான் என்பதையும் அவனுக்குச் சொல்லிக்கொடுங்கள். எதிரி ஒருவன் இருந்தால் நண்பனும் ஒருவன் இருப்பான். இதையும் அவனுக்குப் புகட்டுங்கள்.

புரிந்துகொள்வதற்கு அவனுக்கும் கால மெடுக்கும் விடயம் இது என்பதை நான் அறிவேன். இருந்தாலும் முடியுமானால் சொல்லிப்பாருங்கள். அதாவது அவனுக்குக் கிடைக்கும் ஐந்து டொலர் பணத்தை விடவும் அவன் உழைத்துச் சம்பாதிக்கும் ஒரு டொலர் பணம் எவ்வளவோ மதிப்புள்ளது. வெற்றியில் இன்புறுவதுபோல் தோல்வியை ஏற்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். பொறாமை என்ற தீக்குணத்தை விலக்கிவிடப் போதியுங்கள். அத்தோடு அமைதியில் ஆனந்தம் காணும் இரகசியத்தையும் சொல்லிக்கொடுங்கள். அடாவடி செய்பவர் எளிதில் மண்கவ்வுவர் என்பது அவன் விரைவில் கற்றறிய வேண்டிய ஒன்று.

உங்களுக்குச் சௌகரியமாகும்போது புத்தகங்கள் தரும் அறிவுச் செல்வத்தைப் பற்றிச் சொல்லிப் பாருங்கள். அவன் ஓய்வாக இருக்கக் கொஞ்சம் சந்தர்ப்பம் அளியுங்கள். வானத்துப் பட்சிகளின் மாறாத விந்தையும், சூரிய ஒளியில் சுற்றித்திரியும் தேனீக்களும், பசிய மலைச்சாரலில் பூத்துக் குலுங்கும் மலர்களும் அவன் சிந்தைக்கு விருந்தாகட்டும்.

வகுப்பிலே அவனுக்குக் கற்றுத்தர வேண்டியது ஏமாற்றுவதிலும் பார்க்கத் தோல்வியடைவது மிகவும் மேலானது என்பதாகும். யார் என்ன பிழை சொன்னாலும் தன் சொந்தக் கருத்துக்களில் அவனுக்கு முழு நம்பிக்கை இருக்கவேண்டும். கனிவானவர்களோடு கனிவாகவும், கடினமானவர்களோடு கண்டிப்பாகவும் அவன் நடந்து கொள்ளும்படி போதியுங்கள்.

குறியற்ற கும்பலோடு போகாதபடிக்கு என்னுடைய மகனுக்கு மனோபலத்தை ஊட்டுங்கள். அனைவருடைய பேச்சையும் அவன் கேட்கட்டும். அவற்றை உண்மை என்ற சல்லடையில் சலித்து நல்லதையே ஏற்றுக்கொள்ளும்படி சொல்லிக்கொடுங்கள்

துயரமடையும்போது சிரிக்கும் அவசியத்தை அவனுக்குக் கற்றுத் தாருங்கள். கண்ணீர் விடுவதில் அவமானமில்லை என்பதையும் சொல்லிக்கொடுங்கள். வக்கிரபுத்தியுடையவர்களை எள்ளி நகைக்கட்டும். முகஸ்துதி செய்பவரிடம் அவதானமாயிருக்கட்டும். தனது புத்தித் திறன்களை அதிக பேரத்துக்கு விலைபோகக் கொடுக்கலாம். ஆனால் தனது இதயத்தையும் ஆன்மாவையும் விலைபேச வேண்டாம். கூச்சலிடும் கும்பலுக்கு அவன் காதுகொடுக்கத் தேவையில்லை. தன் பக்கம் நியாயம் இருந்தால் நிலைத்துநின்று போராடட்டும்—இவற்றையெல்லாம் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக இணக்கம் காட்ட வேண்டாம். நெருப்பிலே காய்ச்சப்படும்போதுதான் உருக்கு உரம் பெறுகிறது. அவன் பொறுமைசாலியாயிருப்பதற்கு வேண்டிய தைரியத்தைப் பெற்றிருக்கட்டும். துணிவுக்கு வேண்டிய பொறுமையைக் கடைப்பிடிக்கட்டும். தன்னிலே ஆழ்ந்த நம்பிக்கை வைப்பதற்குக் கற்றுக்கொடுங்கள். அப்போதுதான் மனித இனத்திடமும் மேலான நம்பிக்கையை அவன் எப்போதும் வைத்திருப்பான்.

இது ஒரு பெரிய உத்தரவாக இருக்கிறது. ஆனால் உங்களால் இயன்றதைச் செய்யப்பாருங்கள். எனது மகன் ஓர் அருமையான பிள்ளை; ஆனால் சிறுவன்.

ஆபிரகாம் லிங்கன் (தந்தை)

நன்றி: பவன்ஸ் ஜேர்னல்
தமிழாக்கம்: ஸ்ரீ வி. கே. சபாரட்ணம்

---

# தெய்வீக லட்டு

(பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற முதலாவது இளைஞர் மகாநாட்டில் ஸ்ரீ ஜே. ஜெகதீசன் அவர்களாற்றிய உரையிலிருந்து)

ஒவ்வொரு சாயி நிலையமும், உறுப்பினரும் பகவான் தனது பக்தர்களுக்கு வழங்கும் லட்டுப்போலிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு ''இனிமை'' வழங்கக் கூடியதாயிருக்கவேண்டும். சாயி அடியார்கள், சமூகம், நிலைய உத்தியோகத்தர்கள் யாவரும் தம் முள்ளே இந்த இனிமையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இவ்வினிமையான லட்டு பின்வருவனவற்றை அடக்கியுள்ளது:

(L) (Love) அன்பு, உறுப்பினர்களிடமும், புதிய பழைய பக்தர்களிடமும் காணப்பட வேண்டும். அன்பு யாருக்கு வேண்டற்படுகிறதோ அவர்களுக்கு அன்பைச் சொரியவேண்டும். பத்தியோகம் என்ற கொள்கை எல்லோர்மீதும் அன்பு என்பதை வெளிக்காட்ட வேண்டும்.

(A) (Activity) செயல்பாடு — நிலைய உறுப்பினர்கள் செயல்திறன் மிக்கவர்களாக இருக்கவேண்டும். சிறு பிள்ளைகள், வாலிபர்கள், வயதுவந்தோர், முதியோர் யாவருக்கும் புனிதமான சூழலை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தமது ஆத்மீக அவாவை வெளியிடவும் அதை எல்லா வகைகளிலும் அபிவிருத்தி செய்யவும் வழி சமைக்கப்பட வேண்டும். பக்தர்கள் கர்மயோக நெறியைக் கடைப்பிடிக்க சாயி நிலையங்கள் எல்லா வகையான சந்தர்ப்பங்களையும் வழங்கவேண்டும் — எல்லோருக்கும் சேவை, பாலவிகாஸ், மனித மேம்பாட்டுக் கல்வி, சற்சங்கம்......

(D) Devotion பக்தி — சம்பிரதாயமாகப் பலிபீடத்திலுள்ள படங்களுக்கும், விக்கிரகங்களுக்கும் காட்டப்படும் பக்தி பக்தியல்ல. அவதார புருஷருடைய செய்திகளை மனத்திலும் வாக்கிலும் செய்கையிலும் நிறைவேற்ற வேண்டும். பக்தர்கள் சாயி நிலையத்தில் என்னத்தில் விசுவாசமுடையவர்களாக இருக்க வேண்டும்? படங்களிலா, பூமாலைகளிலா, பஜனையிலா, தன்னைச்சார்ந்த குழுக்களிலா, குற்றம் காண்பவர்களிலா அல்லது அவதாரபுருஷருடைய செய்திகளை நிறைவேற்றுவதிலா?

(D) (Duty) கடமை என்னும் உணர்வு எல்லா உத்தியோகத்தர்கள், சுறுசுறுப்பான உறுப்பினர்கள், பக்தர்கள்பால் பொதிந்து பரவவேண்டும். அவர்கள் சுய ஆர்வமுடையவர்களாகவும், முன்னோக்கிச்செல்ல அவாவுடையவர்களாகவும், தமது சாமர்த்தியத்திற்கும் திறமைக்கும் சவால் விடுபவர்களாகவும், முடிவைக் கடவுளிடம் கையளிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

நிலைய உத்தியோகத்தர்கள் பணி புரிபவர்களேயன்றி பிரபுக்களோ, எஜமான்களோ அல்ல. அவர்கள் செய்யும் எல்லாக் கருமங்களுக்கும் அவதார புருஷருக்கே பொறுப்புடையவராவர் — பக்தர்களுக்கல்ல.

(U) (Unity) தெய்வீகத்தின் இறுதியான விசேஷ அடையாளம் ஒற்றுமையாகும். இந்த ஒருமைப்பாடு உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள், பக்தர்கள் மத்தியிலும் சாயி நிலையங்களுக்கிடையேயும் காணப்பட வேண்டும். அத்துடன் தெய்வீக செய்திகளைப் பூர்த்திசெய்வதற்காக எல்லா இனத்தவர்கள், மதத்தவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த ஆவல் உடையவர்களாக இருக்கவேண்டும். இந்த நம்பிக்கையின் ஒற்றுமை எல்லா நிலையச் செயற்பாடுகளிலும் பிரதிபலிக்க வேண்டும்.

தமிழாக்கம்:
ஸ்ரீ செ. கதிர்காமத்தம்பி

தெய்வீக லட்டுப் பிரசாதம் அன்பளிப்பு:

**விஜயா என்ரப்பிறைஸ்**

**44 [illegible], 4-ம் குறுக்குத் தெரு,**
**கொழும்பு-11.**

தொலைபேசி: 338116

உ

ஓம் சாயிராம்

# நல்ல மாற்றம்

தென் அவுஸ்திரேலியாவில் ஒரு பிர பல்யமான டாக்டர் P. V. என்பவர். அவருடைய அனுபவம் இது:

முதன்முதல் பகவானைத் தரிசிக்க 1978 டிசெம்பர் மாதம் 22-ந் திகதி இருவார விடுமுறையிற் சென்றேன். நான் ஏன் சாயி பாபாவைத் தரிசிக்கச் சென்றேன் என்பதை நீங்கள் அறிய விரும்புவீர்களல்லவா? ஆம். சுவாமி எனது கனவில் தோன்றி, எனது உள்ளுணர்வுமூலம் பல குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்றியுள்ளார். ஆகவே அவருடைய உண்மையான உருவத்தைப் பார்த்து, நான் பல புத்தகங்களில் வாசித்ததுபோன்ற தெய்வீக அனுபவத்தைப் பெற விரும்பினேன்.

பகவானைச் சந்தித்தபின் நான் முழுமையாக மாற்றம் அடைந்துள்ளேன். இப்போது நான் பல வழிகளில் சிறந்த மனிதனாக விளங்குகிறேன். எனது முன்னைய நிலையையும் தற்போதைய நிலையையும் ஒரு பட்டியல் ரூபத்தில் தர விரும்புகிறேன்.

| பாபாவிடம் வர முன்பு | பாபாவிடம் வந்த பின்பு |
|---|---|
| காலை 7-30 மணி வரையில்தான் நித்திரைவிட்டு எழுவேன். | காலை 5-30 மணிக்கே நித்திரைவிட்டு எழுகிறேன். |
| நித்திரைவிட்டு எழுந்தபின் எந்தவித மந்திரம் சொல்வதுமில்லை; கடவுளை நினைப்பதுமில்லை. பகல்நேரத்தில் 2 அல்லது 3 நிமிடத்திற்குமேல் கடவுளைக் கும்பிடுவதில்லை. எந்த வேலை செய்ய ஆரம்பிக்கு முன் கடவுளைக் கும்பிடும் வழக்கமும் இல்லை. | இப்போது காலை மாலை மந்திரம் சொல்கிறேன். சாயி நினைவாக இருக்கிறேன். 1 மணித்தியாலத்திற்கு மேல் தினசரி தியானம் செய்கிறேன். அத்துடன் ஒரு வேலையை ஆரம்பிக்கமுன்பு எப்போதும் கடவுளைக் கும்பிடுகிறேன். |
| மாமிச உணவு சாப்பிடுபவனாக இருந்தேன். | தற்போது ஒரு பூரணமாக மாமிசத்தைத் தவிர்த்துவிட்டேன். |
| இரவு உணவின்பின் உலகியல்விடயமான நூல்களைப் படித்து கடவுளுக்கு மரியாதை செலுத்திவிட்டுப் படுப்பேன். | ஆன்மீக நூல்களை மட்டும் இரவு உணவின் பின் படிப்பேன். சாயி குறித்த பிரார்த்தனைகளைச் சொல்லி படுக்கையில் படுப்பேன். |
| விசேட தினம் எதுவும் அனுசரிக்கப்படவில்லை. | ஞாயிறும், வியாழனும் பகவானுக்கு விசேட பிரார்த்தனைக்காக ஒதுக்கி வைத்துள்ளேன். |

சுவாமியிடம் வந்தபின் எனது குண நலன்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

(i) முன்பிலும் பார்க்க தாராள மனப் பாங்கு உடையவனாக இருக்கிறேன்.

(ii) யார்மீதும் வெறுப்போ, பொறாமையோ இல்லாதவனாக இருக்கிறேன்.

(iii) உலகியல் பொருட்களிலுள்ள பற்றுதல் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. மக்களிலும்கூட.

(iv) கோபத்தையும், தற்பெருமையையும் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி கொண்டிருக்கிறேன்.

(v) நேரத்தை வீணாக்குவதைத் தவிர்த்து ஆன்மீக விடயங்களுக்கு கூடிய கவனம் செலுத்துகிறேன்.

(vi) முன்பு இல்லாதவகையில் மனித சமுதாயத்தின்மீது நல்ல உணர்வுகளை அபிவிருத்தி செய்துள்ளேன்.

எனது குணநலத்தில் இந்த மாற்றங்கள் ஏற்பட முக்கிய காரணம் சாயிதான். எனது ''தெய்வீகத் தாயும், தந்தையும்'' என்ற பிரார்த்தனையினால்தான்.

From "Divine Glory"
Page 88—90.

தமிழாக்கம்: "பவானி"

---

ஓம் சாயிராம்

# பேராசிரியர் என். கஸ்தூரி

ஸ்ரீ C. பாலசிங்கம்

(இலங்கை சாயி நிறுவனங்களின் முன்னாள் தலைவர்)

கொனட்டிகட், யூ. எஸ். ஏ.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளையும், பிரகாசமான வாழ்வையும் உலகம் முழுவதிலும் பரப்புவதில் பேராசிரியர் கஸ்தூரி பங்களித்தளவு வேறு எவரும் பங்களிக்கவில்லை. இவர் பகவானுடன் 35 ஆண்டுகளுக்கு மேலாக நெருங்கிப்பழகி அவரின் வாழ்க்கை வரலாற்றைப் புனைபவராகவும் ''சனாதன சாரதி''யின் ஆசிரியராகவும் பணியாற்றும் தனிப்பெரும் சலுகையைப் பெற்றவராவர். அத்துடன் அவர் "Loving God" என்ற ஒப்பற்ற கதையை எழுதியுள்ளார். இதில் அவர் பகவானிடமிருந்து பெற்ற அனுபவங்களை வெளியிட்டு ''Sathya Sai Speaks'' என்னும் நூலின் அனேக தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவர் முன்னர் பேராசிரியராகவிருந்த அனுபவம், ஆங்கிலமொழிப் பாண்டித்தியம், நகைச்சுவை, அதிமுக்கியமாக பாபாவின்மீது இவர் கொண்ட அசைக்கமுடியாத பற்று ஆகியவை இவரை பாபாவின் ஆழமான தத்துவங்களைப் பொதுமக்களுக்குப் புரியவைப்பதற்கும் உட்கிரகித்துக்கொள்ள வைப்பதற்கும் மிகவும் பொருத்தமானவராக்கி உள்ளது. இந்தியாவின் பல பாகங்களிலும் இருந்துவரும் பக்தர்களுக்கு பேராசிரியரின் கன்னடம், தெலுங்கு, தமிழ்மொழி அறிவு, தகவல் தரும் ஊற்றாகவிருந்தது. இவர் பகவானின் மகிமையைப் பற்றி எழுதியது மட்டுமல்ல பகவானின் தெய்வீக பிரசங்கங்களை மொழிபெயர்ப்பவருமாக இருந்தார்.

1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாம் முதன்முதலாகப் பிரசாந்தி நிலையத்திற்குச் சென்றபோது பார்த்தியை காலதாமதமான இரவு வேளை சென்றடைந்தோம். நாங்கள் பிரசாந்தி நிலையத்தின் எல்லைப்புறத்தில் அன்றிரவை எப்படிக் கழிக்கலாமெனச் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில் பக்தர் ஒருவர் பேராசிரியர் கஸ்தூரியுடன் கதைக்கும்படி ஆலோசனை கூறினார். மிகுந்த மனத் தயக்கத்துடன் அவரின் கதவைத் தட்டினோம். அவர் வெளியே வந்தார். அவரின் முகத்தில் எதுவித கோபமோ, சகிப்புத்தன்மை இன்மையோ காணப்படவில்லை. பெரும் கருணையுடன் அவர் ஓர் அறையின் திறப்பை எமக்குத் தந்தார்.

மறுநாள் — அது ஒரு பரிசுத்தமான நாள். வைகுந்த ஏகாதசி அன்று நாங்கள் பஜனைக்குச் சென்றோம். இந்நாளை எம்மால் மறக்கமுடியாது. ஏனெனில் அந்நாள் பகவானின் கரங்களால் நாம் அமிர்தம் பெற்ற நாள்.

பேராசிரியர் கஸ்தூரி தமது ஒய்வு வேளையில் பகவானிடமிருந்து தான்பெற்ற அனுபவங்களை எடுத்துரைப்பார். பிரசாந்தி நிலையத்தில் அனுட்டிக்கப்படும் நடத்தைக் கோவைகளை எமக்கு விளக்குவார். ஒவ்வொரு முறையும் நாம் அவரைத் தரிசிக்கும்பொழுது நாம் அவர்மேல் வைத்த அன்பும் வியப்பும் ஆழமாக வளர்ந்தன. பகவான் தனது உண்மையான பக்தனிடம் எதிர்பார்த்தவற்றை இவர்பால் காணக் கூடியதாகவிருந்தது.

இவரின் கடைசி நாளிகைகளில் பகவான் இவரின் பக்கத்தில் இருந்து தனது ஆசீர்வாதங்களைச் சொரிந்து கொண்டிருந்தார். பேராசிரியர் கஸ்தூரியின் வாழ்க்கை பெறுமதிமிக்க வாழ்வாகும். "சாயியில, சாயியுடன், சாயிக்காக வாழ்ந்த வாழ்வாகும்."

இப் பெருந்தகையைப்பற்றி அவரின் நூறாவது பிறந்தநாளையொட்டி (24-12-97) ''சாயி மார்க்கம்'' சஞ்சிகைக்கு என்னை எழுதும்படி அழைக்கப்பட்டதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

தமிழாக்கம்: ஸ்ரீ செ. கதிர்காமத்தம்பி


அன்பளிப்பு :

மயூரா பி. வி. சி.

76, அப்துல் ஹமீட் வீதி,
கொழும்பு-12.

(போன்: 332102)

# பாலவிகாஸ் மாணவருக்கான வினா - விடை

(பலருடைய வேண்டுகோளுக்கிணங்க தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படுகிறது)

## சாயி அவதாரங்கள்

1. பகவான் அவதரித்த வம்சம் என்ன?
ராஜு வம்சம்.

2. பகவான் அவதரித்த கோத்திரம் என்ன?
பரத்வாஜ ரிஷி கோத்திரம்.

3. பரத்வாஜ ரிஷி வேதங்களைக் கற்ப தற்குக் கேட்ட வரம் என்ன?
மூன்று முறை ஒவ்வொன்றும் 100 வருடங்கள் இப்பூவுலகில் வாழ வரம் கேட்டார்.

4. இந்திரன் பரத்வாஜருக்குக் கூறிய அறிவுரை என்ன?
'எத்தனை யுகங்கள் சென்றாலும் வேதங்களைக் கற்கமுடியாது. அதற்கு ஒரு யாகம் செய்து, இறைவனையே அவதரித்துப் போதிக்கும்படி கூறலாம்' என்றார்,

5. யாகத்திற்கு அதிதேவதையாக யாரை அழைத்தார்?
சக்தியை.

6. சக்தியை அழைக்க கைலாசம் சென்ற ரிஷி எத்தனை நாள் காத்திருந்தார்?
எட்டு நாள்.

7. அப்போது என்ன நடந்தது?
சிவசக்தி நடனம் நடந்துகொண்டிருந்த தால் சக்தி இவரைக் கவனிக்கவில்லை. கால் மரத்து ரிஷி மயங்கிவிழுந்தார்.

8. ரிஷிக்கு அளிக்கப்பட்ட வரம் என்ன?
பரத்வாஜ ரிஷியின் கோத்திரத்தில் மூன்றுமுறை அவதரிப்பதாகச் சிவன் வரமளித்தார்.

9. சக்திக்கு சிவனால் இடப்பட்ட சாபம் என்ன?
'இரண்டாவது அவதாரமாகிய சிவசக்தி அவதாரத்தின்போது ரிஷி தேவியின் கவலையீனத்தால் பட்ட கஷ்டத்தை தேவியும் (சக்தி) அனுபவிக்கவேண்டும் என்று.

10. பகவான் யாருடைய அம்சம்?
சிவசக்தி அம்சம்.

11. சிர்டி சாயி பாபாவின் இருப்பிடத் திற்கு வழங்கும் பெயர் என்ன?
துவாரகா மாயி.

12. துவாரகா மாயி எங்கு அமைந்துள் ளது?
இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்தில் ஆமெந் நகர் என்னும் பகுதியில் அமைந்துள்ளது.

13. சிர்டி சாயி தினம் எப்போது கொண் டாடப்படுகிறது?
ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 27ஆந் திகதி.

14. சிர்டி சாயி அனைவருக்கும்' அளித்த பிரசாதம் எது?
உதி (விபூதி).

15. சிர்டி சாயியின் தாய் தந்தை பெயர் என்ன?

தேவகிரியம்மா, கங்கா பவாடியா (அந்தணர் குடும்பம்).

16. சிர்டி பிறந்ததும் பெற்றோர் யாது செய்தனர்?

தவ வாழ்வு மேற்கொள்ளக் கணவனும் மனைவியும் வனத்தை நோக்கிச் செல்லும்போது நடுக்காட்டில் ஒரு மரத்தடியில் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையை வன தேவதைகள் காப்பாற்றட்டும் என்று மரத்தடியிலேயே விட்டுச் சென்றனர்.

17. குழந்தை சிர்டிக்கு என்ன நிகழ்ந்தது?

அவ்வழியே வந்த ஒரு முஸ்லீம் பக்கிரும் மனைவியும் குழந்தையின் அழுகுரல் கேட்டு, தாமே அதனை எடுத்துக் கொண்டு தம் வீட்டிற்குச் சென்றனர்.

18. சிர்டியின் சரிதத்தைக் கூறும் நூலின் பெயர் என்ன?

''சாயி சத் சரிதம்'',

19. ''சாயி சத் சரிதம்'' யாரால் எழுதப்பட்டது?

சிர்டி சாயியின் சம்மதத்துடன் 'ஹேமத் பந்த்' என்பவரால் எழுதப்பட்டது.

20. சிர்டி பாபா எப்போதும் கூறும் வார்த்தை என்ன?

'அல்லா மாலிக்' (கடவுள்தான் ஒரே உரிமையாளர்).

21. சிர்டி செய்த அற்புதங்கள் இரண்டு கூறுக.

(1) எண்ணெய்க்குப் பதிலாக நீர் விட்டு விளக்கேற்றினார்.

(2) தவுதி அல்லது சுத்த விருத்தி அதாவது தமது குடலை வாந்தி எடுத்து சுத்தம் செய்து காய்ந்தபின் மீண்டும் விழுங்குவது.

இவைபோன்ற பல அற்புதங்கள் செய்தார்.

22. சிர்டி சாயி யாருடைய அம்சம்?

சிவனுடைய அம்சம் (சிவ அவதாரம்).

23. சிர்டி சாயியின் குரு யார்?

வெங்கூஷ.

24. பிரேம சாயி எங்கு அவதரிப்பார்?

கர்நாடக மாநிலத்தின் மத்திய பகுதியில் அவதரிப்பார்.

25. பிரேம சாயி யாருடைய அம்சம்?

சக்தியினுடைய அம்சம்.

26. சாயி அவதார நோக்கம் என்ன?

தர்மத்தைப் புனருத்தாரணம் செய்யவும், நல்லவர்களைப் பாதுகாக்கவும், பாதை தவறியவர்களுக்கு அறிவு புகட்டவும் அவதாரம் வந்துள்ளது.

27. சாயி அவதாரமான பகவான் பாபா 69ஆவது பிறந்ததின உரையில் 3 காணிக்கை தரும்படி கேட்டார். அவை என்ன?

(i) மாமிசம் உண்ணாமை

(ii) மதுவைத் தவிர்த்தல்

(iii) புகைத்தலைத் தவிர்த்தல்.

28. சாயி அவதாரம் எவ்வளவு காலம் பரவி நீடிக்கும்?

மூன்று நிகழ்வுகளாக மூன்று நூற்றாண்டு காலம் பரவி நீடிக்கும்.

29. 1960-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புட்டபர்த்தியில் பகவான் அளித்த உறுதிமொழி என்ன?

வேதத்தை உத்தாரணம் பண்ணுகிறேன், கட்டாயம் பண்ணுவேன் என்பது

30. அவதாரம் என்றால் என்ன?

இறைவன் ஓர் உருவம் தாங்கிப் பூமிக்கு வருதலே அவதாரம்.

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்

ஓர் அனுபவம்:

# எல்லா உயிர்களிடத்தும் அன்பு - சாயி திருநாமத்தின் அற்புதம்

ஸ்ரீ நா. வி. மு. நவரத்தினம்
சிரேஷ்ட சங்கீத விரிவுரையாளர்,
நுண்கலைப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்

சென்ற மாதம். ஒருநாள் காலை பத்திரிகை வாங்கும் பொறுப்பு எனக்கு இருந்தது. காலை 7-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிச் சந்தியில் பத்திரிகையை வாங்கிக்கொண்டு 15 அடி தூரம் நடந்திருப்பேன். 5 வயதுள்ள ஒரு வாட்ட சாட்டமான இளம் நாயொன்று உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தது என் கண்களில் பட்டது. அதன் கண்கள் மூடியபடி இருந்தது. அசைவற்ற நிலையில் இலேசான முனகல் சத்தம் அத்துடன் நாக்கு வெளியே தள்ளி நுரைகள் வந்துகொண்டிருந்தது. அருகில் நின்றிருந்த ஓர் இளைஞர் இதனைப் பார்த்து "நாய் இன்று நமக்குத்தான் வேலை வைக்கப்போகிறது" என்றார். உணர்வற்ற நிலையிலிருந்த அந்த நாயைக் கவனிக்க யாரும் இல்லை

எனது மனம் என்னையறியாமல் வேதனையுற்றது. சுவாமியின் திருநாமத்தை 27 முறை அந்த இடத்திலேயே நின்று தியானித்தேன். சுவாமியிடம் "கருணைக்கடலே இதற்கு நீங்கள் உயிர்ப்பிச்சை அளிக்கக் கூடாதா?" என்று மன்றாடினேன். வேதனையைச் சுமந்தவாறு வீட்டுக்குச் சென்றேன். இரவுவரை அந்த நினைவுதான். மறுநாள் மறந்தாயிற்று. மனித நினைவலை அந்தளவுடன் விடைபெற்று விடுகிறது.

டிசெம்பர் 3-ந் திகதி, கடும் மழை. எனது வேலைத்தலத்திற்குச் செல்வதற்காக பேருந்து தரிப்பில் நின்றுகொண்டிருந்தேன். என்ன அதிசயம்! அந்த மரணப் போராட்டத்திற்குரிய நாய் அங்கு வந்து எனக்குச் சற்றுத் தூரத்தில் நின்று தன்னுடைய காயங்களை நாவினால் நக்கியவாறு என்னை நன்றாகப் பார்த்தவாறு நின்றது. பின் அது உற்சாகமாக ஓடி மறைந்தது.

சாயியின் திருநாமத்தின் அதியற்புத மகிமையையும், அளவற்ற கருணையையும் நினைத்து என் உள்மனம் என்னை மறந்து அழுதது. எளியேனாகிய என்னுடைய பிரார்த்தனையை ஏற்று இக்கற்ற அந்த ஜீவனுக்குத் தனது பேரருளைச் சுரந்திருக்கிறாரே என்று மனம் உருகியது.

"உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் சுவாமியினுடையது என்பதையன்றியும், பிற உயிர்களுக்காக நீ இரங்கிவிட்டால் நான் உனது வேண்டுதலுக்குப் பதில் தருவேன்" என்பதை எனக்கு சுவாமி கற்பித்து விட்டார்.

சாயி அன்பர்களே, அளவற்ற கருணை வள்ளல், அருளை வாரி, மாரியென வழங்கிக்கொண்டிருக்கிறார். நாம் வணங்கும் அனைத்துத் தெய்வங்களும் ஒரே உருவாக சாயிபகவானிடம் சங்கமித்துள்ளன. உங்கள் பொன்னான நேரத்தை மண்ணாக்காமல், எந்நிலையிலும் "ஓம் ஸ்ரீ சாயிராம்" என்ற தாரக மந்திரத்தைக் கூறுங்கள். உங்களுக்குப் பிரியமான எந்தக் கடவுளின் நாமத்தையும் கூறி அவரை அழைக்கலாம்.

பல பிரச்சினைக்கு மத்தியில் வாழும் நமக்கு இறைவனின் நாமம் எந்த இடத்திலும் கைகொடுக்கும்.

# இணைப்புக்குழுச் செய்திகள்

வடபிராந்திய இணைப்புக்குழுவில் சில மாற்றங்களும், புதிய நியமனங்களும் இடம் பெற்றதாக அறிவித்துள்ளனர். வடமாகாணத்தில் சாயி வழிபாட்டை ஆரம்பித்த 1967-ம் ஆண்டுமுதல் நிறுவனத்துடன் தொடர்புடைய வடபிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீ எஸ். விஜயரட்ணம் அவர்கள் 31-12-97-ல் ஓய்வுபெறுகிறார். அவரின் இடத்திற்கு சேவை இணைப்பாளராகக் கடமையாற்றிய ஸ்ரீ வி. சேனாதிராஜா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். விபரம் வருமாறு:—

தலைவர்
ஸ்ரீ வி. சேனாதிராஜா
"சாயி இல்லம்",
கரவெட்டி.

உப தலைவர்கள்
(1) ஸ்ரீ எஸ். முத்துலிங்கம்
ஸ்ரீ சத்ய சாயி நிலையம்
வவுனியா.

(2) ஸ்ரீ இ. வசந்தசேனன்
3, வைத்தியசாலை ஒழுங்கை,
மானிப்பாய்.

செயலாளர்
ஸ்ரீ வி. கே. சபாரட்ணம்
முருகமூர்த்தி கோவில் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

பொருளாளர்
ஸ்ரீ சி. பாலசேகரம்
37/2, வைமன் றோட்,
யாழ்ப்பாணம்.

இணைப்பாளர்கள் (ஆன்மிகம்)
ஸ்ரீ எஸ். ஆர். சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி,
தாவடி, கொக்குவில்

கல்வி (ம. மே. க,)
ஸ்ரீ நா. கந்தசாமி
"அன்ன வாசம்"
சூராவத்தை, சுன்னாகம்.

கல்வி (சத்ய சாயி ஆன்மிகக் கல்வி)
ஸ்ரீமதி ம. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி,
தாவடி, கொக்குவில்.

சேவை
ஸ்ரீ கே. வி. சிவனேசன்
"சாயி தர்சன்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

இளைஞர் பிரிவு
ஸ்ரீ இ. வசந்தசேனன்
3, வைத்தியசாலை வீதி,
மானிப்பாய்.

பயிற்சிகள் நிர்வாகி
பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி)
சங்கிலியன் தோப்பு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பாளர்
ஸ்ரீ M. C முருகையா
தலைவர், யாழ் சத்ய சாயி நிலையம்.

## நிலையச் செய்திகள்

பகவானின் அவதார தினம் எல்லா நிலையங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைவிட மிகக் கூடுதலான மக்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர் என எல்லா நிலையங்களும் அறிவித்துள்ளன. சுவாமியின் பிரசன்னத்தை உணரக்கூடியதாக இருந்ததென சுன்னாகம் பஜனை நிலையம் உட்பட சில நிலையங்கள் அறிவித்துள்ளன.

திருக்கோயில் சத்யசாயி நிலையத்தில் 97 சித்திரை மாதத்தில் ஒரு சாதனை முகாம் நடைபெற்றது. ''சாதனை'' பற்றி ஸ்ரீ சா. விவேகானந்தன் அவர்களும், ''சகிப்புத்தன்மை'' பற்றி ஸ்ரீ எம். ராஜமணி அவர்களும், 'தீவிரப் பணியாளர் கடமை'' பற்றி ஸ்ரீ ஞா. விநாயகமூர்த்தி அவர்களும், ''சேவை'' பற்றி ஸ்ரீ C. N. செல்வராஜா அவர்களும் கருத்துரைகள் வழங்கினர். 58 சாயி அன்பர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த மே மாதம் முதல் இளைஞர்களுக்காக ஆங்கில வகுப்பும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சத்யம், தர்மம் பற்றிய விளிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், மனித மேம்பாட்டுக் கல்வி பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்துவதற்காகவும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி என்பவற்றைப் பாடசாலைகளிடையே நடாத்த திருக்கோவில் நிலையத்துடன் இணைந்து தம்பிலுவில், விநாயகபுரம் ஆகிய நிலையங்களும் செயற்பட்டன.

28-12-97-ல் யாழ்ப்பாண நிலையத்தில் காலை 7-30 — மாலை 5-30 வரை நடைபெற்ற அகண்ட பஜனையில் வடபிராந்தியத்திலுள்ள 35 நிலையங்களும் கலந்து கொண்டு சிறப்பித்தன. புதுவருடத்தில் இந்நாட்டில் ''சாந்தி'' நிலவ வேண்டும் என்பது கோரிக்கையாக அமைந்தது.

## பாடசாலைகளில் மனித மேம்பாட்டுக் கல்வி

மனித மேம்பாட்டுக் கல்வியைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதற்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக பிரசாந்தி நிலையத்தில் கடந்த நவம்பர் 18, 19, 20-ந் திகதிகளில் ஒரு பயிற்சி முகாம் ''B'' பிரிவு நாடுகளுக்காக நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சிக்கு இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமிருந்து (வடபிராந்தியம் உட்பட) பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

வடபிராந்தியத்தில் இத் திட்டம் தொடர்பாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவைதொடர்பான விரிவான கட்டுரையை எமது அடுத்த இதழில் எதிர்பாருங்கள்,

★

குறிப்பு: சாயி அன்பர்கள் தமது ஆன்மிக அனுபவங்களையும், சாயி இலக்கியங்களில் உங்களைக் கவர்ந்த பகுதிளையும் மற்றைய சாயி பக்தர்களுடன் பகிர்ந்துகொள்ள எமக்கு எழுதி அனுப்புங்கள்.

நிலையங்கள் தமது சிறப்பு நிகழ்ச்சிகளை எழுதியனுப்புங்கள்.

— ஆசிரியர்

ஓம் சாயிராம்

## ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்கள் (பிரதேசம் XV)
## இலங்கை

பிரசாந்தி நிலையத்திலும் இலங்கையிலும் கொண்டாடப்படும்

# விழாக்களும் மற்றும் விசேட நிகழ்ச்சிகளும்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 1-ந் | திகதி | வியாழன் | சாந்தி வருடத்தைக் குறிக்கும் விசேட பஜனை |
| ஜனவரி | 14-ந் | திகதி | புதன் | தைப்பொங்கல் |
| *பெப்பிரவரி | 25-ந் | திகதி | புதன் | மகாசிவராத்திரி |
| *மார்ச் | 29-ந் | திகதி | ஞாயிறு | உகாதி (தெலுங்கு புதுவருடம்) |
| *ஏப்பிரல் | 5-ந் | திகதி | ஞாயிறு | ராம நவமி |
| ஏப்பிரல் | 14-ந் | திகதி | செவ்வாய் | சிங்கள — தமிழ் புதுவருடம் |
| மே | 6-ந் | திகதி | புதன் | ஈஸ்ரம்மா தினம் |
| மே | 9-ந் | திகதி | சனி | புத்த பூரணை பகவான் பாபா முன்னிலையில் வைட்பீட்டில் கொண்டாடப்படும் |
| மே | 10-ந் | திகதி | ஞாயிறு | |
| மே | 11-ந் | திகதி | திங்கள் | வெசாக் பௌர்ணமி தினம் |
| யூலை | 7-ந் | திகதி | செவ்வாய் | முகம்மது நபிகளின் பிறந்த தினம் |
| *யூலை | 9-ந் | திகதி | வியாழன் | குரு பூரணை |
| *யூலை | 26-ந் | திகதி | ஞாயிறு | உலக அங்கவீனர் தினம் |
| *ஆகஸ்ட் | 14-ந் | திகதி | வெள்ளி | கிருஷ்ண ஜெயந்தி |
| *ஆகஸ்ட் | 26-ந் | திகதி | புதன் | விநாயகர் சதுர்த்தி |
| *செப்டம்பர் | 4-ந் | திகதி | வெள்ளி | ஓணம் பண்டிகை |
| செப்டம்பர் | 14-ந் | திகதி | திங்கள் | பாலவிகாஸ் தினம் |
| *செப்டம்பர் | 20 ந் | திகதி | ஞாயிறு | இரத்ததான தினம் |
| செப்டம்பர் | 27-ந் | திகதி | ஞாயிறு | பகவான் சிர்டி சாயியின் அவதார தினம் |
| *செப்டம்பர் | 30-ந் | திகதி | புதன் | விஜயதசமி |
| *அக்டோபர் | 19-ந் | திகதி | திங்கள் | தீபாவளி |
| *நவம்பர் | 7-ந் | திகதி | சனி | மாலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை அகில உலக அகண்ட பஜனை |
| *நவம்பர் | 8-ந் | திகதி | ஞாயிறு | |
| *நவம்பர் | 19-ந் | திகதி | வியாழன் | மகளிர் தினம் |
| *நவம்பர் | 23-ந் | திகதி | திங்கள் | பகவான் பாபாவின் அவதார தினம் |
| *டிசம்பர் | 25-ந் | திகதி | வெள்ளி | கிறிஸ்மஸ். |

* பிரசாந்தி நிலையத்தில் கொண்டாடப்படும் நிகழ்ச்சிகள்

வெளியீடு.
பிரதேச செயலகம்
''சாயி மந்திர்''
22, பாண்ஸ் பிளேஸ்,
கொழும்பு-7.

ஓம் சாயிராம்

''மறைந்து உன்னுள்ளே காணப்படும் தெய்வத்தை உன்னால் பார்க்க முடியாவிட்டாலும், கண்ணெதிரே காணும் தெய்வங்கள் உன் தாயும், தந்தையும் என்பதைக் கற்றுத் தருவது எமது கலாச்சாரம்.

தாயையும், தாய்நாட்டையும் தெய்வமாக மதிக்கவேண்டும் என வற்புறுத்திச் சொல்வதும் எமது கலாச்சாரமே!''

— பாபா —

## அமரர் தங்கச்சியம்மா சின்னையா

அவர்களின் நினைவாக மகன்

**ஸ்ரீ சி. முத்துலிங்கம்**

பிரசாந்தி வீதி,

வவுனியா

**அவர்களின் அன்பளிப்பு.**

ஸ்ரீ சாயி அச்சகம், இணுவில்.